# பெருங்கதை

செந்தமிழ் அந்தணர்
புலவர் இரா. இளங்குமரனார்

மாணவர் பதிப்பகம்

# பெருங்கதை

செந்தமிழ் அந்தணர்
இரா. இளங்குமரனார்

மாணவர்
பதிப்பகம்

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **பெருங்கதை** |
| ஆசிரியர் | : | **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாளர் | : | இ. வளர்மதி |
| முதல் பதிப்பு | : | 2004 |
| தாள் | : | 11.6 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | : | 1/16 கிரௌன் |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கம் | : | 8 + 64 = 72 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. **30** |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | **சரவணன்** |
| அச்சு | : | எம்.கே. எண்டர் பிரைசஸ்,<br>சென்னை – 5<br>Ph: 28482499, 28480654 |
| கட்டமைப்பு | : | இயல்பு |
| வெளியீடு | : | **மாணவர் பதிப்பகம்,**<br>எ4, மாதவ் குடியிருப்பு,<br>5, டாக்டர் தாமசு சாலை,<br>தியாகராயர் நகர், சென்னை - 17<br>தொ.பே : 5518 3162 |
| நூல்கள் கிடைக்குமிடம் | : | **தமிழ்மண் பதிப்பகம்,**<br>2 சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17<br>தொ.பே : 5538 9712 |

# கதையின் கதை

பேரப்பிள்ளைகள் பாட்டியினிடம் கதை கேட்டுக் கெஞ்சும்; மன்றாடும். அவ்வேளையில் பாட்டிக்கு ஒரு பெருமிதம் ஏற்படும். "இன்னும் நாள் வீணாகவில்லை; எனக்கும் பரிவாரங்கள், எடுபிடிகள் உள்ளன" என்று இழந்துபோன ஆட்சியின் தொடுக்கு இருப்பதாக நினைப்பார். ஆனாலும், தம் நிலையைச் சற்றே உயர்த்த நினைத்து, தமக்கு வேண்டும் வெற்றிலை பாக்கு வாங்கித்தர, அவற்றை இடித்துத்தர என வேண்டும் வேலை வாங்கிக் கொள்வார்.

கதை சொல்லும் போது "என் கதையே பெரிய கதை; நான் பட்ட கதையைச் சொல்லவா! படாத கதையைச் சொல்லவா! கெட்ட கதையைச் சொல் லவா! கெடாத கதையைச் சொல்லவா! என நீட்டி முழக்கிச் சொல்வதும் இடையிடையே பாட்டு, நடிப்பு, வேடிக்கை காட்டுவதும், கதைத் திருப்பமான இடத்தில் நிறுத்திவைத்து ஆவலைத் தூண்டிப் பின்னர்த் தொடங்குவதும் வழக்கம். அவரே சொந்தமாகக் கதை கட்டவும், பாட்டுக் கட்டவும், விடுகதை போடவும் வல்லார். இவ்வாறு உலகில் ஒவ்வொரு நாட்டு முதியர் நிலையும் இருந்தமை அறியவரும்.

பஞ்சதந்திரக் கதை, ஈசாப்புக்கதை என்பவையும், நம் நாட்டில் வழங்கும் தெனாலிராமன் கதை, மரியாதைராமன் கதை என்பனவும், விக்கிரமாதித்தன்

பட்டி கதை, ஆயிரம் தலைவாங்கி அபூர்வசிந்தாமணி கதை என்பனவெல்லாம் சுவையாகச் சொல்லப் படுவன.

வீரமாமுனிவர் இயற்றிய அவிவேக பரிபூரண பரமார்த்த குருகதை என்னும் கதை நகைச்சுவை மிக்கது.

இந்நாளில் தொடர்கதை, சிறுகதைகளின் செல்வாக்கு மிகுதி. துணுக்குக் கதை, துக்கடாக்கதை என்பனவும் பெருகுகின்றன. பெரிதும் சுவையும் பொழுதுபோக்கும் ஆகிய நோக்கில் ஆக்கப்படுவன.

இன்னொருவகைக் கதை நாடளாவ வழங்கும் சிறுசிறு கதைகளையெல்லாம் தொகுத்து 'இதிகாசம்' என்னும் பெயரால் ஆக்கப்பட்ட கதை. ஆளும் அரசர் பற்றியும் அவர்தம் ஆட்சி, போர், கொடை என்பவை பற்றியும் எழுதப்பட்ட காப்பியக் கதைகள். அவ்வகையில் சீவகன் கதை, உதயணன் கதை, நளன்கதை, அரிச்சந்திரன் கதை என்பன பாடுபுகழ் பெற்றன.

உதயணன் என்னும் அரசனைப் பற்றிய கதையைப் பெருங்கதை எனப் பெயரிட்டுப் பாடினார் கொங்குவேளிர் என்பார். 'பிருகத் கதா' என்னும் வடமொழி நூலில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டதால் அப் பெயரிட்டார். அப் பெயர்க்குத்தக அது பெருங்கதையே ஆகும்.

ஒரு மரத்திற்கு ஆணிவேர் ஒன்று இருந்தாலும் பக்கமெல்லாம் படரும் கிளை வேர், சல்லி வேர், சிம்பு வேர் எனப் பலப்பல இருப்பது போல இக் கதைக்குள் கிளைக் கதைகள் பல உள்ளன. அந்நாளில் மக்கள் வழக்கில் வழங்கிய பல்வேறு கலைகள், பண்பாடுகள்,

நாகரிகங்கள், இயற்கை செயற்கைப் பொருள்கள், காட்சிகள் என்பவை எல்லாம் பின்னிவைக்கப்பட்டுள்ளன. இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி என்பது போல் விளங்குகிறது இப் பெருங்கதை.

வடநாட்டுக் கதையே எனினும் அக்கதைக் கருவைக் கொண்டு, கொங்குவேள் தமிழக மண்ணின், கலையின், பண்பாட்டின், காட்சிகளின் விளக்கங்களையே எழுதியுள்ளார் என்பதை உணரமுடியும். கங்கையையும் கோசலத்தையும் பற்றிக் கம்பன் சொன்னாலும், காவிரியும் சோழனும் ஆங்கே பளிச்சிடுதல் போல்வது இது.

எளிய இனிய சுருக்க அறிமுக நூலாக வெளிவரும் நூல் இது. விரிவான நூலைக் கற்கத் தூண்டும் நூல் இது. யான் எழுதிய இந்நூல், என்னிடம் இல்லாமல் போகியும், தாம் பெற்ற நூலை அருமையாகப் போற்றிக் காத்து அச்சூர்தி ஏறித் தமிழுலாக் கொள்ள உதவியவர் பேரா. முனைவர் **இரா. இளவரசு** அவர்கள்.

இதனைத் தாமே பெற்று அருமையாக அச்சிட்டு உதவும் பதிப்புத் தோன்றல் திரு **இளவழகனார் வளர்மதியர்** ஆகிய இவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியன்.

அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

# பதிப்புரை

'இளமையில் கல்' என்பது அவ்வையார் மொழி. இளமைப் பருவம் இனியது. எளிமையாகக் காட்சிகளையும், செய்திகளையும் உள்வாங்கிக் கொள்ளும். ஆதலால் கற்கும் பருவத்தில் அவர்களுக்குத் தேவையான உயர்ந்த கருத்துகளை யெல்லாம் தருதல் பெற்றோர்கள் - ஆசிரியர்கள் - பெரியவர்கள் கடமையாகும்.

நம் மொழி தமிழ் மொழி. தொன்மையான மொழி. தூய மொழி. கட்டமைந்த இலக்கணங்களும், கவின்மிக்க இலக்கியங்களும் எண்ணரிய வரலாறுகளும் தன்னதாகக் கொண்டது. அதன் இனிமை, அதன் நயம், அதன் பண்பாடு ஆகியவை அயல்நாட்டாரையும் அயல் மொழியாரையும் கவர்ந்திழுத்துப் பல்வேறு கடமைக ளாற்ற உதவியிருக்கின்றது. ஆதலால், தமிழர் வரலாறு, தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு, தமிழர் இலக்கியம் ஆகியவற்றையெல்லாம் மாணவர்களுக்கும், இளைஞர் களுக்கும் உரிய காலத்தே தந்து விட வேண்டுமென்று '**மாணவர் பதிப்பகம்**' ஆழமாகவும் அழுத்தமாகவும் எண்ணியது. அதன் செயல் வீச்சாக ஐயா இளங்குமரனா ரின் படைப்புகளை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறது. இலக்கியச் செம்மல் இளங்குமரனார் அவர்கள் பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழக ஆய்வாளர் பதவி ஈறாகப் பல்வேறு நிலைகளில் நாற்பதாண்டுகளுக்கு மேல் பணி செய்த பெரியர். தம் வாழ்வையே தமிழ் வாழ்வாக்கி பன்னூறு நூல்கள் இயற்றியவர். ஆத்திசூடி முதல் தொல்காப்பியம் ஈறாக உரையும் விளக்கமும் கண்டவர். பொது மக்களோடு சமுதாயப் பணியால் பொருந்திய வாழ்வினர்.

ஒழுக்கமும், வாய்மையும், தொண்டு உள்ளமும், மாணவர்களுக்கு ஊற்றாகப் பெருக்கெடுத்து வரவேண்டும் என்னும் உயர்ந்த நோக்குடனும் எந்தமிழ் இளையரை தமிழ் அன்னையின் தவப் புதல்வர்களாக ஆக்கும் பெரு விருப்புடனும் இப்பெருந்தமிழ் அறிஞரின் நூல்களைப் பதிப்பித்துள்ளோம்.

*உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில்*
*அடைகின்ற வெற்றியெலாம்*
*உன்றன் வெற்றி!*
*அயராதே! எழுந்திருநீ!*
*இளந்தமிழா, அறஞ்செய்வாய்!*
*.........இந்நாள்*
*செயல்செய்வாய் தமிழுக்குத்*
*துறைதோறும் துறைதோறும்*
*சீறி வந்தே.*

எனும் **பாவேந்தர்** வரிகளை நினைவுகூர்ந்து புகழால் நிலைபெற்று நிலவும் வாழ்வை மாணவர்கள் தம் வாழ்வின் நோக்காகக் கொள்ள வேண்டும் எனும் தளராத விருப்பத்தின் உந்துதலால் இத்தமிழ் நிலத்தில் விதைத்துள்ளோம்.

இப்பணியில் துணைநின்று என் வாழ்விலும் தாழ்விலும் முழுப் பங்களிப்புச் செய்கின்ற உடன் பிறவா இளவல்கள், **அ. மதிவாணன், கி. குணத்தொகையன்** ஆகியோர்க்கு நன்றியுடையேன்.

**என்றும் நன்றிக்குரியோர்** : திருவாளர்கள் குப்புசாமி, சரவணன், கலையரசன், பிரியா, பட்டு; அமுதோன், விசயன், இனியன், கிட்டான்; மா.து. ராசுகுமார், மு. வையாபுரி, ஸ்ரீ. பிரேம்குமார், லோ. கலையரசி, கோகிலா; தனசேகரன், எம்.கே. எண்டர்பிரைசஸ், வெங்கடேசுவரா ஆப்செட், குமரேசன், நா. வெங்கடேசன்.

**- பதிப்பாளர்**

# உள்ளுறை


பெருங்கதை 1

கதையுள் கலைவிளக்கம்

1. கொங்குவேளிர், பெருங்கதை 46

2. ஆசிரியரும் மாணவரும் 49

3. பெண் கொடுக்கும் பெற்றோர் 52

4. நண்பர் இயல்பு 54

# பெருங்கதை

## கதை ஆர்வம்

கதை கேட்கும் ஆசை எல்லோருக்கும் உண்டு; சின்னஞ்சிறு குழந்தை முதல் கிழவர் வரை அனை வருக்கும் அந்த ஆசை உண்டு. கால் ஓய்ந்து கன்னம் ஒடுங்கி வயது முதிர்ந்த பொக்கை வாய்ப்பாட்டி கால் மேல் கால் போட்டு நீட்டி உட்கார்ந்து கொண்டு கதை சொல்லும் அழகே அழகு! அவள் பக்கத்தே சிட்டுக் குருவிகள் போலாகக் குழந்தைகள் ஐந்தோ ஆறோ சேர்ந்து உட்கார்ந்து கொண்டும், ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் கதை கேட்கும் அழகு தனிப் பேரழகாகும்! பாட்டி கதை மட்டுமா சொல்கின்றாள்? இடை இடையே பாட்டென்ன! இராகம் என்ன! தாளம் என்ன! நகைச்சுவை என்ன! எல்லாச் சுவை களுக்கும் குறைவில்லை. அதனால்தானே குழந்தைகள் பாட்டிமார்களைச் சுற்றிக் கொண்டு அலைகின்றன!

## பெருங்கதை

கதை சொல்லுவதற்குப் பாட்டிக்குப் பட்டறிவு இருக்கிறது; கற்பனை இருக்கிறது; திறமை இருக்கிறது. இதுபோலவே பட்டறிவும், கற்பனையும், திறமையும் உடைய பலர் கதைகள் பலவற்றை உருவாக்கிச் சென் றிருக்கிறார்கள். அவர்கள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் கதை கட்டியிருக்கின்றார்கள்.

அவர்கள் ஆக்கிய கதைகளில் ஒன்றை இங்கே காண் போம். அக் கதையின் பெயர் **பெருங்கதை** என்பதாம். பெருங்கதை அளவால் மட்டும் பெருங்கதையாக இல்லை. கதை அமைப் பாலும், சுவையாலும் பெருங் கதையாகவே இருக்கின் றது. இதனால் நூலின் பெயரே பெருங்கதை என்றாகி விட்டது. இக் கதையைக் கவிதை வடிவில் பாடியவர் **கொங்குவேளிர்** என்னும் புலவர் ஆவர்.

**சதானிகன்**

பழங்காலத்தில் பரத கண்டத்தில் வத்தவநாடு என்னும் நாடொன்று இருந்தது. இந் நாட்டின் தலைநகர் கௌசாம்பி. சதானிகன் என்னும் வேந்தன் கௌசாம்பியைத் தலைநகராகக் கொண்டு வத்தவ நாட்டைச்சிறப்புடன் ஆட்சி செய்து வந்தான். இவனுக்கு வைசாலி நாட்டு அரசன் மகளான மிருகாபதி என்ப வள் மனைவியாக இருந்தாள். அவள் அழகும், அறிவும், பண்பும் ஒருங்கே பெற்றவள்; கணவனிடத்துக் குறையாத அன்புடையவள்; ஆதலால் சதானிகனும் மிருகாபதியுடன் இன்பமான இல் வாழ்க்கை நடத்திக் கொண்டு, நாட்டையும் நன்முறை யில் ஆண்டு வந்தான்.

**மிருகாபதி**

மிருகாபதி ஒருநாள் கருவுற்றாள். அரசனும் மகிழ்ச்சியடைந்து அவளைப் பெரிதும் போற்றிக் காத்ததுடன், அவள் விரும்பும் இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று இன்புறுத்தினான். மிருகாபதி ஒருநாள் தன் தோழியர் சூழ மேல்மாடத்தில் சிவந்த மலர்களையும், சிவந்த அணிகலன்களையும் அணிந்து, சிவந்த பட்டாடையை உடுத்து, மலர்கள் பரப்பப்

பெற்ற கட்டில் ஒன்றிலே அயர்ந்து உறங்கினாள். அப்பொழுது வான்வழியே சரபப் பறவை என்னும் பெரும் பறவை ஒன்று பறந்து வந்தது. அது மாடத்தை நோக்கிப் பார்த்தது. அங்கே செந்நிறத்துடன் விளங்கும் மிருகாபதியினைக் கண்டு ஒரு தசைத் தொகுதியாகும் எனக் கருதி, கட்டிலோடு சேர்த்துத் தூக்கிக் கொண்டு பறந்து சென்றது. நெடுந் தொலைவு சென்று ஒரு முனிவருடைய இருப்பிடத்தின் அருகே கட்டிலை இறக்கி வைத்துக் குத்தித் தின்னத் தொடங்கியது. அச்சமயம் மிருகாபதி விழித்துக் கொண்டபடியால் "இது தசையன்று; உயிருடையது" என்று எண்ணி அவ்விடத்தில் போட்டுவிட்டுப் பறவை பறந்து சென்றது.

**மகப்பேறு**

காட்டில் தனியாக இருந்த மிருகாபதிக்கு அச்சம் மிகுதியாயிற்று. மாடத்தையும், தோழியர்களையும் காணவில்லை; எங்கு நோக்கினாலும் காடும் மேடுமே தோன்றின. "இது என்ன? நான் எப்படி இங்கே வந்தேன்?" என்று திகைப்படைந்தாள். இக் கவலையின் இடையே அவளுக்குக் கருப்ப வேதனையும் ஏற்பட்டது. சற்று நேரத்தில் எத்தகைய அல்லலும் இல்லாமல் அழகிய ஆண் குழந்தை ஒன்றை மிருகாபதி பெற்றெடுத்தாள். அக் குழந்தைக்கு ஒளியூட்ட வருபவன் போலக் கதிரவனும் அப்பொழுது எழுந்தான். காவலன் மாளிகையிலே பிறக்க வேண்டிய குழந்தை காட்டிலே பிறந்ததே என்று வருந்திக் கொண்டும், அரற்றி அழுது கொண்டும் இருந்தாள் மிருகாபதி. இந்நேரம் அவ்வழியே வந்து கொண்டிருந்த சேடக முனிவர் என்பவருக்கு அவள் அழுகுரல் கேட்டது. அதனால் அவர் அருகில் வந்தார். யாரோ ஒருவர்

வருந்துகின்றார் என்று எண்ணிக் கவலையுடன் விரைந்து வந்த அந்த முனிவர், தம் மகளே அழுகின் றாள் என்பதனைக் கண்டு மேலும் வருந்தினார்.

**சேடக முனிவர்**

சேடக முனிவர் முன்பு வைசாலி நாட்டின் வேந்தராக இருந்தவர். அவரது மகளே மிருகாபதி. சேடகர் உலக வாழ்க்கையின் நிலையாமையை அறிந்து தம் மகன் விக்ரமனிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டுத் துறவியாகியிருந்தார்.

**உதயணன்**

உதவிக்கு வந்த முனிவர் தன் தந்தையாரே என்ப தனை அறிந்த மிருகாபதி சற்று ஆறுதல் கொண்டாள். அதன்பின்னர் முனிவர் அவளைத் தம் குடிசைக்கு அழைத்துச் சென்றார். சென்றவர் குழந்தையின் அழகினைக் கண்டு மகிழ்ந்து, கதிரோன் **உதிக்கும் வேளை**யில் பிறந்த காரணத்தினால் ‘உதயணன்’ என்னும் பெயர் இக்குழந்தைக்குப் பெயராகட்டும் என்றார். அன்று முதல் குழந்தை உதயணன், கதிர வனைப் போலவே பொலிவுடன் நாள்தோறும் வளர்ந்து வரலாயினன்.

**யூகி**

சேடக முனிவர் இருந்த மடத்தில் முனிவர் தலைவராக, **பிரம சுந்தர முனிவர்** என்பவர் இருந்தார். அவர் மனைவியார் **பரமசுந்தரி** என்பார். முனிவர் பெருங் குணமும், பேராற்றலும் உடையவர். அம்மையார் கலங்காத உள்ளமும், பேரன்பும் படைத்தவர். இவர்கட்கு யூகி என்னும் அருமை மகன் ஒருவன்

இருந்தான். அவன் உருவில் சிறியனாக இருக்கும் பொழுதே அறிவில் பெரியவனாக விளங்கினான்.

உதயணனும் யூகியும் உருவத்தாலும், பருவத் தாலும் ஒப்புடையவராகவே இருந்தனர். அதனால் இருவரும் ஒன்றாக உண்டு, உறங்கி விளையாடினர். இதுபோலவே சேடக முனிவரிடத்தும் பிரம சுந்தர முனிவரிடத்தும் கற்பன அனைத்தும் ஒன்றாகவே கற்று உயர்ந்த திறமை பெற்றனர். கல்வித் துறையில் மிகுந்த புலமை யடைந்த துடன், அரசியல் திறமையும், விற்போர் மற்போர் முத லான போர்க்களப் பயிற்சியும் பெற்றுத் திகழ்ந்தனர்.

**கோடபதி**

பிரமசுந்தர முனிவர் யாழ் வாசித்தலில் வல்லவர். அவர் **கோடபதி** என்னும் பெயருடைய அரிய யாழ் ஒன்றினை வைத்திருந்தார். அதனை முனிவர் மீட்டுங் கால் பறவையும் விலங்கும் வேறுபாடற்று ஒன்றுகூடி வந்து களிப்புறும். அன்றியும் யானைகளை அடக்கிப் பணிய வைக்கும் மந்திரம் ஒன்றையும் முனிவர் கற்றிருந் தார். இசைக் கலையை யூகிக்கும் உதயணனுக்கும் கற்பித்ததுடன் யானையை அடக்கும் மந்திரத்தை உதயணனுக்குக் கற்றுக் கொடுத்தார்; யூகியை உதயண னது அடைக்கலப் பொருளாகத் தந்து பெருமைப் படுத்தினார்; அன்றுமுதல் யூகியும் உதயணனும் ஈருடலும் ஓர் உயிருமாக வாழ்ந்து வந்தனர்.

**தேவ யானை**

ஒருநாள் உதயணன் ஒரு காட்டுக்குச் சென்றான். அங்குத் தேவ யானை ஒன்றினைக் கண்டு தன் யாழை மீட்டினான். யாழிசைக்கு மயங்கிய யானை உதயண

னுக்குப் பணிந்து நின்று அவன் ஏவலைச் செய்ததுடன், அவனைத் தொடர்ந்து வந்து அன்று முதல் எப்பொழுதும் அவனிடத்தே இருந்து வந்தது. ஆனால் அவ்யானை ஒருநாள் உதயணன் கனவிலே தோன்றி, "என் மீது பாகரை ஏற்றினாலும், என்னைக் கயிற்றினால் பிணைத்துக் கட்டினாலும், நான் உண்பதற்குமுன் நீ உண்டாலும், உன்னை விட்டு நீங்கிவிடுவேன்" என்று கூறியது. விழித்தெழுந்த உதயணன் கனவினை நினைத்து அன்றுமுதல் இம் மூன்று திட்டங்களையும் தவறாமல் காத்து வந்தான். யானையும் உற்ற துணையாக விளங்கி வந்தது.

சேடகன் விக்கிரமன் என்னும் தன் மைந்தனிடம் வைசாலி நாட்டை ஒப்படைத்திருந்தானல்லவா! அவ் விக்கிரமனுக்கும் துறவில் பற்று ஏற்படவே தந்தை இருக்கும் இடத்தை அடைந்தான். அங்கே தன் தந்தையுடன், தங்கை மிருகாபதியிருப்பதையும், அவள் குமரனாக உதயணன் விளங்குவதையும் கண்டு பெருமகிழ்வுற்றான். பிள்ளையில்லாதவனான தனது நாட்டை உதயணனே ஆளவேண்டும் என்று தந்தையினிடமும் தங்கையினிடமும் மன்றாடிக் கேட்டுக் கொண்டான்.

**அரசு**

கலை வன்மையும், ஆட்சி முறைமையும் கண்டிருந்த உதயணன் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு உரியவனே என எண்ணிய சேடக முனிவர் உதயணனையும் மிருகாபதியையும் வைசாலி நாட்டுக்கு அனுப்பி வைத்தார். யூகியும் நண்பனைத் தொடர்ந்து சென்றான். தேவ யானை அவர்களைப் பின் தொடர்ந்து சென்று இசை இன்பம் நுகர்ந்து இருந்தது.

**அமைச்சர்**

உதயணன் வைசாலி நாட்டின் அரசன் ஆனான். மக்கள் அனைவரும் அவன் ஆட்சியில் மகிழ்ந்தனர். பக்கத்து நாடுகளை ஆண்டு வந்த சிற்றரசர்களும் பேரரசர்களும் உதயணனுக்குப் பணிந்து வரி செலுத்தினர். யூகி உதயணனுக்கு நண்பனாகவும், அமைச்சனாகவும் இருந்து அரசியல் அலுவல்களைச் செவ்வையாகக் கவனித்துக் கொண்டு பேரும் புகழும் உண்டாக்கினான். அவனுக்குத் துணையாக **உருமண்ணுவா, வயந்தகன், இடவகன்** என்னும் மூன்று அமைச்சர்களும் இருந்தனர்.

**வைசாலி நாடு**

இது இவ்வாறிருக்க, மிருகாபதியைக் காணாத சதானிகன் பெருங்கவலைக்கு ஆட்பட்டிருந்தான். அங்கும் இங்கும் ஆட்களை ஏவித் தேடிப் பார்க்கச் செய்தான். இவற்றால் பயன் யாதொன்றும் இல்லாது போகவே முனிவர் ஒருவரை அடுத்துத் தன் கவலையினைத் தெரிவிக்க, ஞானம் கைவரப்பெற்ற அம்முனிவர் மிருகாபதி வைசாலியில் இருப்பதையும், அவள் பெற்றெடுத்த புதல்வன் அந்நாட்டை ஆள்வதையும் விளக்கமாகக் கூறினார். இதனைச் கேள்வியுற்ற சதானிகன் வைசாலிக்கு வந்தான். மனைவியையும் மகனையும் கண்டு மகிழ்ந்து, அங்கே சில நாட்கள் தங்கியிருந்து விட்டு, மனைவியை அழைத்துக் கொண்டு கௌசாம்பிக்குச் சென்றான்.

**வத்தவ நாடு**

அதன் பின்னர் மிருகாபதி பிங்கலன், கடகன் என்னும் இரண்டு புதல்வர்களைப் பெற்றெடுத்தாள்.

இதற்குள் ஆண்டுகள் பல சென்றன. சதானிகனும் துறவு விருப்புடையனாகி உதயணனே வத்தவ நாட்டையும் ஆளவேண்டுமென வேண்டிக் கொண்டான். அதனால் உதயணன் வைசாலி நாடு, வத்தவ நாடு ஆகிய இரண்டு நாடுகளுக்கும் அரசனாகி, கௌசாம்பி நகரிலிருந்து ஆட்சி செய்தான். யூகி வைசாலியிலிருந்து கொண்டு அந் நாட்டினை நன்றாகக் கவனித்து வந்தான்.

### ஆணையும் ஆனையும்

உதயணன் ஒருநாள் அரிய நாடகம் ஒன்றனை நெடுநேரம் வரை கண்டு கொண்டிருந்தான். நாடகம் காணும் பொழுது பசி தெரியவில்லை. அது முடிந்தவுடனே கடும்பசி ஏற்பட்டது. வேறொரு நினைவும் அற்றவனாய் விரைந்து சென்று உணவருந்தினான். இதனை அறிந்த தேவயானை, உதயணன் தன் வாக்குத் தவறி நடந்துவிட்ட செயலை வெறுத்து அவனை விட்டுப் பிரிந்தது. யானையின் பிரிவு உதயணனுக்குப் பெருங் கவலையைத் தந்தது. அமைச்சர்கள் எவ்வளவோ தேற்றியும் பயனில்லாது போய்விட்டது. நாடு நகர்களை விட்டு விட்டுக் காடு கரையெல்லாம் தேடிக் கொண்டே திரிந்தான். கோடபதி யாழை எத்துணை இசையுடன் மீட்டியும் யானை வந்த பாடில்லை. அதனால் நாள்தோறும் உதயணன் காட்டு வழிகளிலே அலைந்த வண்ணமாகவே இருந்தான்.

### வரிப்பகை

வத்தவ நாடும், வைசாலி நாடும் முன்னர் உச்செயினி நாட்டுக்கு வரி செலுத்தி வந்தன. ஆனால், உதயணன் அரசனானபின் வரி செலுத்துவதை நிறுத்தினான். அல்லாமலும், உச்செயினிக்கு வரி

செலுத்தி வரும் சில நாடுகளையும் தனக்கு வரி செலுத்து மாறு செய்தான். இதனால் உச்செயினி வேந்தனான பிரச்சோதனன் உதயணன் மீதும், யூகி மீதும் வெறுப்புக் கொண்டான். வெறுப்பு வெஞ்சினமாக மாறியது. ஒருநாள் அமைச்சர்களையும் படைத் தலைவர்களையும் அழைத்து வைத்து இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு ஏவினான்.

**சாலங்காயன்**

அவனது அமைச்சன் **சாலங்காயன்** என்பவன் பேரறிவினன்; அரசியல் தந்திரங்களில் கைதேர்ந்தவன்; பெருஞ்சூழ்ச்சிக்காரன். அதனால் யூகியையும், உதயணனையும் அடக்கத்தக்க சமயம் இதுவே எனக் கருதிக் கொண்டு சொல்லத் தொடங்கினான்.

"அரசே! உதயணனும் யூகியும் பெரும் வீரர்கள்; அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து நிற்காதவாறு நாம் தடுக்க வேண்டும், ஒரு படை வைசாலியை நோக்கிச் சென்று அதனைத் தாக்கினால் யூகி அங்கேயே தங்கி எதிர்க்கநேரிடும். தேவ யானையைப் பிரிந்து காட்டு வழியில் திரியும் உதயணனைப் பொய்மை யானை ஒன்று செய்தனுப்பி அதனால் கைது செய்யலாம். இவற்றைச் செய்து முடிக்கத்தக்க சமயம் இதுவே யாகும்" என்று கூறினான்.

பின்னர், அரசன் ஒப்புதலுடன் பொறி நுணுக்கம் மிக்கவர்களால் உண்மையான யானை என்று தோன்று மாறு யானை ஒன்றனை மெழுகு, அரக்கு, துணி இவற்றால் செய்வித்து, அதனுள்ளே தொண்ணூற்றாறு வீரர்களையும், அவர்கட்குத் தேவையான படைக்கலன் களையும் ஏற்றி வைத்து யானையைக் கௌசாம்பி நோக்கி நடத்திச் சென்றான்.

### பொய் யானை

பொய்யான யானை மெய்யான யானைபோலவே இயங்கிச் சென்று, யாழ் மீட்டித் திரியும் உதயணனை நெருங்கி நின்றது. பிரிந்து சென்ற தேவயானை மீண்டும் வருவதாகக் கருதி வியப்புற்று உணர்ச்சிமிக்கவனாய்க் கோடபதியை மேலும் மேலும் மீட்டிக் கொண்டே யானையை மிக நெருங்கினான். ஆனால், அவன் எதிர்பார்க்காத நிலைமையில், உள்ளே இருந்த வீரர்கள் திடீரென வெளியே வந்து பெருந்தாக்குதல் நடத்தினர். உதயணனுடைய வாள் பரணி பாடியது. வந்த பகைவர் தலைகள் உருண்டன. உதயணனுடன் இருந்த வயந்தகனும், படை வீரர்களும் பகைவர்களை மலை மலையாகக் குவித்தனர்.

சாலங்காயன் முன்னமே தந்திரத்துடன் பெரும் படை ஒன்றினையும் அக் காட்டில் ஒளித்து வைத்திருந்தான். அவையனைத்தும் பெரும் ஆரவாரத்துடன் போரிடத் தொடங்கின. இந் நிலைமையில் உதயணன் கையிலிருந்த வாள் யானையொன்றின் தந்தத்திற்பட்டு முரிந்து போயிற்று; படைகள் சூழ்ந்து கொண்டன. அதனால் இனி ஒன்றும் செய்ய முடியாதெனக் கருதிய உதயணன் ஓலையொன்றில் சில எழுதி வயந்தகனிடம் தந்து யூகியினிடம் சேர்க்குமாறு கூறினான். பின்னர் வெறுங்கையனாக இருந்த உதயணனைப் பகைவர் சிறை செய்து உச்செயினிக்குக் கொண்டு சென்றனர். பிரச்சோதனன் கட்டளைப்படி உதயணன் சிறையில் அடைக்கப் பெற்றான்.

### யூகி செயல்

வயந்தகன் தான் கொண்டு வந்த ஓலையை யூகியினிடம் கொடுத்தான். யூகிக்குச் சொல்லொணாத்

துயரம் ஏற்பட்டது. நிகழ்ந்த வஞ்சகச் செயலை நினைத்து நெஞ்சம் கொதித்தான். ஆனால், கோவப் பட்டுப் பயனில்லை என்று எண்ணி, "வஞ்சத்தை வஞ்சத்தாலேயே வெல்வேன்; யானையால் உதயணனை மயக்கிப் பிடித்துக் கொண்டு சென்ற பிரச்சோதனனது நகரத்தை யானையால் அழித்து, நெருப்பு ஊட்டி, அல்லலுறுத்தி, அவன் மகளையும் அவன் அறியாமல் கொண்டு வரச் செய்து உதயணனுக்கு மணம் செய்து வைப்பேன்" என்று உறுதி செய்தான்.

உதயணன் பிரிவினைப் பொறுக்கமாட்டாமல் யூகி இறந்தான் என்று நாடு நகரங்கள் அறியுமாறு பறையறையச் செய்து விட்டுப் பிணம் ஒன்றில் தன் ஆடை அணிகலங்களைப் போட்டுச் சுட்டெரிக்கச் செய்தான். உதயணனது உறவினர்களைப் பாதுகாப் புடன் இருக்கச் செய்தான், நாடு நகரங்களைத் தக்க நிலைமையில் காத்து வருமாறு ஏற்பாடு செய்தான், பின்னர் மாற்றுருவுடன் நண்பர்களையும் பணியாளர் களையும் வரச் செய்து தானும் உச்செயினிக்குப் போய்ச் சேர்ந்தான்.

**ஒற்றர்**

உச்செயினியின் புறத்தில், காடுகளுக்கிடையில் பாழ்வீடு ஒன்று இருந்தது. அதில் யூகி மாறுவேடத் துடனே இருந்து கொண்டு தன்னுடன் வந்தவர்களை அரண்மனைக்குள்ளேயும் வெளியேயும் ஏதேனும் வேலை பார்த்து வருமாறு ஏவினான். அவ்வாறே, ஊமையர்களாகவும், செவிடர்களாகவும், குருடர் களாகவும் நடித்துக் கொண்டு பலர் வாழ்ந்தனர். ஒற்றர்களாகவும் சேவகர்களாகவும், காவலர்களாகவும் வாழ்ந்தனர் பலர். கூலிகளாகவும், வணிகர்களாகவும்,

துறவிகளாகவும் இருந்தனர் பலர். இவர்கள் அனைவரும் ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து வந்து உடனுக்குடன் யூகியினிடம் சேர்ப்பர். யூகியிடும் கட்டளைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றுவர்.

**இனம் காணல்**

இது இவ்வாறிருக்க, ஒருநாள் யூகி ஆவேசம் உடையவன் போலாகக் கரகம் ஒன்றைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் உதயணன் இருக்கும் சிறைக்கூடத்தின் பக்கத்தில் வந்தான். தானும் உதயணனுமே அறிந்த பாடலொன்றைப் பாடினான். அதனைக் கேட்ட உதயணன் இப்பாடல் பாடுபவன் யூகியே என்பதனை அறிந்து, தன்னிருப்பினைப் புலப்படுத்துமாறு, யூகியின் பாடலுக்கு ஏற்பக் குழலால் ஊதினான். வாயிலண்டை வந்து நின்றும் யூகியைப் பார்த்தான். யூகி, உதயணன் இருப்பிடம் கண்டு களிப்புற்றுத் தன்னிருப்பிடம் சேர்ந்தான். இவ்வாறே ஊரார் வேடிக்கை பார்த்துவர யூகி பலநாள்கள் தொடர்ந்து சிறைச்சாலைக்கு வந்து பாட்டுப் பாடவும் அதுகேட்ட உதயணன் குழல் ஊதவுமாக இருந்தனர். ஆனால் இவர்கள் செயலினைக் கண்ட வாயில் காவலனுக்கு ஐயம் ஏற்பட்டது. அதனால், அரசனிடம் சென்று அறியப்படுத்தினான்.

**மார்புத் தழும்பு**

அப்பொழுது அரசனுடன் அங்கிருந்த சாலங்காயன், "அரசே! பாடிக் கொண்டு வருபவன் யூகியாக இருக்கலாம் என்று யான் எண்ணுகின்றேன். யூகியானால் அவன் மார்பில் யானைத் தந்தம் பாய்ந்ததால் ஏற்பட்ட பெருந் தழும்பு ஒன்று கிடக்கும். அதனைக்

கண்டறிய வேண்டும்" என்றான். இதனைக் கேட்ட அரசன் யூகியின் மார்பினைக் கவனித்து வருமாறு ஏவலருக்கு ஆணையிட்டான். இதனை, அங்கே செவிடனாக நடித்து வந்த யூகியின் ஒற்றன் ஒருவன் கேட்டு வந்து யூகியினிடம் கூறினான். அதன்பின் மார்பு வெளியே தெரியாதவாறு பழந் துணிகளைப் போட்டு மறைத்துக் கொண்டு வீதிகளில் நடமாடித் திரிந்து வந்தான் யூகி.

**நளகிரி**

இவ்வாறு நாள்தோறும் தெரு வழியே போய் வருவதால் ஏற்படும் பயன் என்ன? உதயணனை விடுவிக்க வேண்டுமல்லவா? அதனால் ஒருநாள் நடு இரவுப் பொழுதில் கண்டவர் அஞ்சும்படியாக உருவினை மாற்றிக்கொண்டு பிரச்சோதனனது யானையான நளகிரியை நெருங்கினான். அதற்குப் பலவகையான புகையையும், போதை மருந்தையும் ஊட்டி வெறி கொள்ளுமாறு செய்தான். மந்திர உரைகள் பல கூறினான். ஊரினை அழிக்குமாறும் அதன் காதருகே ஓதினான். இவ்வனைத்தையும் ஏற்றுக் கொண்ட யானை வெறிகொண்டு கட்டுக்கடங்காமல் தூணையும் முறித்துக் கொண்டு வெளியேறியது. அங்கும் இங்கும் ஓடியும் சாடியும் வட்டமிட்டும் மாட மாளியை, கூரை குடிசைகளை நொறுக்கியும் சிதைத்தும் பாழாக்கிற்று. அடக்கவந்த பாகரை அழித்துக் கொன்றது; மக்கள் மனம் நடுங்கினர்; உள்ளம் நைந்தனர்; வாய் விட்டுக் கதறினர். மன்னவன் இதனை அறிந்து உடனே யானையை அடக்காவிடில் மாநகரமே அழிந்துவிடும் என்று கவலை கொண்டு அமைச்சர்களோடும் ஆராய்ந்தான்.

அப்பொழுது அமைச்சன் சாலங்காயன் "நளகிரியை அடக்கும் ஆற்றல் உதயணனுக்கே உண்டு என்றும், அவனை வேண்டிக் கொள்வது அன்றி வேறு வழியெதுவும் இல்லை என்றும் கூறினான். அரசனும் அப்பொழுது வேறொன்றும் செய்வது அறியானாய் உதயணனிடம் சிவேதன் என்னும் அமைச்சனை அனுப்பி வைத்தான். சிவேதன் நயமாகச் சொல்லாடும் திறம் வல்லவன். அவன் உதயணனைக் கண்டு நளகிரியைப் பற்றியும், நகரத்தின் அழிவு பற்றியும், விரிவாக எடுத்துரைத்து அடக்கி உதவினால், தான் அவன் சிறை விடுதலைக்குரிய அனைத்தும் செய்வதாகவும் கூறினான். அவனது உரைக்கு உதயணன் செவிசாய்த்து, யானையை அடக்குவதாக உறுதிமொழி கூறினான்.

### யானையை அடக்குதல்

உதயணன், வெறிகொண்டு திரியும் யானையின் முன் சென்று தான் கற்றதான மந்திர உரையைக்கூறி, அது அசைவற்றிருக்குமாறு செய்தான். பின்னர் யானையை யாழிசை மீட்டிப் பணியச் செய்து அதன் மீது ஏறிக் கொண்டு அரண்மனையை நோக்கிச் செலுத்தினான். மக்கள் அனைவரும் புத்துயிர் பெற்றவர்கள் போலாகி மகிழ்ச்சியடைந்து ஆங்காங்குக் கூடி "வத்தவர் கோமான் வாழ்க! உதயணன் வாழ்க!" என்று வாழ்த்தினர்.

உதயணன் யானை மீது எடுப்போடும் இருந்து கொண்டு அரண்மனையை அடைய அரசனும், அரசியும், மைந்தரும், மகளிரும் ஒருங்கு நின்று வரவேற்று வாழ்த்துரை கூறினர். உதயணன் அவர்கள் மகிழுமாறு சில பேசி இருக்க அங்கே மின்னல் கொடி

போன்றவளும், அரசனது பெருந்தேவி பெற்றெடுத்த தலைமகளும் ஆன வாசவதத்தையைக் கண்டான். அவளும் உதயணனைக் கண்டு மகிழ்ந்தாள். இருவரும் தம்மை மறந்து நின்று ஒருவர் அழகை ஒருவர் எண்ணி எண்ணி வியந்து கொண்டனர். பின்னர் அரசனது அன்புக் கட்டளையை ஏற்றுக் கொண்ட உதயணன் யானைச் சேரியில் இன்பமாகத் தங்கியிருந்தான்.

**கலைப் பயிற்சி**

பிரச்சோதனனுக்கு உதயணனை உடனே அனுப்பிவைக்க மனம் இல்லை. அவன் கற்ற கலை யனைத்தும் மைந்தர்க்கும் மகளிர்க்கும் கற்பித்து உதவு மாறு வேண்டிக் கொண்டான். அதனால் மைந்தர்க்கு விற்பயிற்சியும், வாசவதத்தைக்கு வீணைப் பயிற்சியும் தர ஏற்பாடு செய்தான். உதயணனும் அதனை ஏற்றுக் கொண்டு அன்றுமுதல் அவர்களுக்குப் பயிற்சியளித் தான். முன்னமே தன் உள்ளங்கவர்ந்தவளான மங்கையே தன்னிடம் யாழ் பயில வந்துள்ளாள் என்ற மகிழ்ச்சி உதயணனுக்கும் தன் உள்ளங் கவர்ந்த காளையே யாழாசிரியன் என்ற மகிழ்ச்சி வாசவதத்தைக் கும் ஏற்பட்டமையால் ஒருவருக்கொருவர் மகிழ்ந்து யாழ்ப் பயிற்சியில் விரும்பி நின்றனர். மைந்தர்களும் வில், வாள் பயிற்சிகளில் வல்லவராயினர்.

**வயந்தகன்**

உதயணனுக்குரிய வசதிகளைச் செய்துதவும் பொறுப்பைப் பாலகுமாரன் என்பவன் ஏற்றிருந்தான். அவன் ஒரு நாள் அவனிடம் பணிபுரிந்து வந்த வயந் தகன் வழியாக உதயணனுக்குத் தேவையான பொருள் களை அனுப்பி வைத்தான். அவனை அடையாளம்

கண்டறிந்து மகிழ்ந்த உதயணன் பாலகுமாரனிடம் "இனி இவன் வழியாகவே எனக்குரியதை அனுப்பி வைக்கவேண்டும்" என வேண்டிக் கொண்டான். அவ்வாறே நாள்தோறும் உதயணனுக்கு வேண்டிய வற்றைக் கொண்டு வருபவனாக வயந்தகன் இருந்தான். இதனால் யூகிக்கும், நண்பர்களுக்கும் உதயணனைப் பற்றிய செய்திகள் நாள்தோறும் தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்தன. யூகிக்கும் இச் சூழ்நிலை உதவியாக இருந்தது.

**தத்தை காதல்**

இது இவ்வாறாக, உதயணன் வாசவதத்தை மீது பேரன்பு கொண்டான். எப்பொழுதும் அவள் நினைவாகவே இருந்தான். அவளை எப்படியும் மனைவியாக அடைய வேண்டுமே என்று ஏங்கிக் கொண்டிருந்தான்.

வாசவதத்தையும் உதயணனை அடைய வேண்டுமே என்ற ஏக்கத்தோடேயே நொடிதோறும் இருந்தாள். ஆனால் அவளைத் திருமணம் செய்துகொள்ள அரசர் பலர் விரும்பினர். அதைக் கேட்டறிந்த வாசவதத்தை வெயிலிடைப் பட்ட புழுவைப் போலாகத் துடித்தாள். நெருப்பினிடையில் விழுந்த மெழுகுபோல உருகினாள். உள்ளங்கவர் காளையை - யாழ் ஆசிரியனை - அடைவேன். இல்லையேல் சாவேன்" என்னும் உறுதியுடன் இருந்தாள்.

**சாங்கியத் தாய்**

இவ்வுறுதிமொழியினைத் தன் செவிலித் தாயான சாங்கியத்தாய் என்பவளிடம் உரைத்து, உதயணனிடம் சொல்லி வருமாறும் ஏவினாள். சாங்கியத் தாயும்,

வாசவதத்தையும் உதயணனும் மணம் செய்து கொள்வதையே விரும்பினாள்; ஆதலால் அவளது விருப்பத்தை நிறைவேற்றுமாறு கருதி உதயணனைத் தனித்துச் சந்தித்து உரையாடினாள். அவனும் வாசவதத்தையைப் போன்ற உறுதியுடையவனாக இருப்பதை அறிந்து தத்தையின் எண்ணத்தை எடுத்துக் கூறினாள். அதனைக் கேள்வியுற்ற உதயணன் மகிழ் வுற்றான். சாங்கியத்தாய் உதயணன் கூறிய அனைத்தை யும் தத்தைக்குக் கூறித் தேற்றி வைத்தாள்.

### அரங்கேற்றம்

அரசன் பிரச்சோதனன் தன் மைந்தர் கற்றுக் கொண்டவற்றை அரங்கேற்றஞ் செய்விக்க விரும்பி னான். அதனால் தக்க ஏற்பாடுகளைச் செய்து நல்ல தொரு நாளில் மைந்தர்கள் தத்தம் கல்வித் திறனைக் காட்டி மன்னன் முதல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர். அவர்களது கலைத் திறமையால் உதயணனது புகழ் மேலும் உயரலாயிற்று. இதன் பின்னர், தத்தையின் இசைப் பயிற்சியைப் பலரும் அறியுமாறு விரும்பிய அரசி அதற்கும் அரங்கேற்றுவிழா நடத்த ஏற்பாடு செய்தாள். இசைவல்லோர் கூடியிருந்து அவள் யாழ் வாசிப்பையும், பாட்டையும் கேட்டு வியப்புற்றனர். அவளைப் பலவாறாய் வாழ்த்திக் கூறினர். இந்நிகழ்ச்சி யால் உதயணன் பெரிதும் மகிழ்வுற்றான். அரசன் பிரச் சோதனன் உதயணனைப் பாராட்டினான். அவனைத் தக்க சிறப்புடன் அவன் நாட்டுக்கு அனுப்பி வைக்கவும் எண்ணினான்.

### கௌசாம்பி

ஆனால், கௌசாம்பி நாட்டை இப்பொழுது உதயணனது பகைவனான ஆருணி என்பவன் ஆண்டு

வந்தான். அங்கு ஆட்சி செய்து வந்த உதயணனது தம்பியர்களான பிங்கல கடகரைக் காட்டுக்கு ஓட்டி விட்டான். இவற்றை அறிந்திருந்த பிரச்சோதனன் தன் மைந்தன் பாலகனுடன் பெரும் படையையும் அனுப்பி வைத்து, ஆருணி அரசனை வென்று கௌசாம்பியைப் பிடித்து உதயணனிடம் ஒப்படைக்கத் திட்டமிட்டான்.

இத் திட்டத்தை ஒற்றர் வழியாக யூகி அறிந்தான். தன் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமே என்று பலவாறாய்ச் சிந்தித்தான். பாகீரதி என்னும் ஒருத்தியை அழைத்து, குறி சொல்லும் ஆவேசக்காரி போலாகத் தெருவழியே போகவேண்டுமென்றும், அவ்வாறு போய், "நீராட்டு விழாச் செய்யாததால் நளகிரி வெறி கொள்ளுமாறு செய்த தெய்வம் யானே! இப்பொழுதும் நீராட்டு விழாச் செய்யீராயின் யானைக்குள் புகுவேன்" என்று கூறுமாறும் ஏவினான். அவளும் அவ்வாறே செய்தாள்.

**நீராட்டு விழா**

இதனைக் கேள்வியுற்றோர் நடு நடுங்கி அரசனிடம் அறிவித்தனர். அவன் நளகிரி செய்த அழிபாட்டினை மறக்காதிருந்தபடியால் நீராட்டு விழாச் செய்ய உடனடியாக ஏற்பாடு செய்தான். உதயணனையும் விழா முடிந்த பின்னர் கௌசாம்பி செல்லுமாறு வேண்டிக் கொண்டான். நகர மாந்தர் அனைவரும் யானை குதிரைவண்டி இவற்றில் ஏறிக் கொண்டு எள்விழ இடமில்லாமல் ஆற்றையடைந்தனர். மன்னனும் அவன் தேவியர்களும் விழாவுக்குச் சென்றனர். உதயணன் பத்திராவதி என்னும் யானை மேல் ஏறிச் சென்றான். வாசவதத்தை சிவிகை ஒன்றிலே ஏறி

ஊர்ந்தாள். குறிப்பிட்ட பொழுதில் அனைவரும் மகிழ்ச்சியாக நீராடிக் கொண்டிருந்தனர்.

புறப்படு

இவ்வேளையில் உதயணனை வயந்தகன் நெருங்கி வந்தான். அவன் யூகியினிடமிருந்து சில செய்திகளைக் கொண்டு வந்திருந்தான். தக்க சமயம் இதுவே என்று எண்ணித் தனித்திருந்த உதயணனிடம் "அண்ணலே, உனக்குரைக்குமாறு யூகி கூறியவற்றை உரைப்பேன் கேட்பாயாக!" என்று தொடங்கி, சற்றுநேரத்துள் நகரம் தீக்கு இரையாக்கப்படும் என்றும், அச்சமயம் பார்த்து வாசவதத்தையை உன் யானைமீது ஏற்றிக் கொண்டு செல்லவேண்டும் என்றும், காலம் அறிந்து பகைவனை வெல்லுவதே காவலன் கடமை என்று நினைத்துச் செயலாற்ற வேண்டும் என்றும், தக்க பொழுதில் உதவிபுரிய நம் வீரர்கள் ஆங்காங்கு உள்ளனர் என்றும் கூறினான்.

மேலும், நீ ஏறிச் செல்லும் யானை விரைந்து செல்வதாயினும் இடை வழியில் ஒரு காட்டில் வீழ்ந்து இறந்துவிடும் என்றும், அவ்வாறு இறந்து போனாலும் அவ்விடத்தே இடையூறு ஏற்படாதவாறு காக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தென்றும் கூறினான். இது கேட்ட உதயணன் மிகவும் மகிழ்ந்து யூகியின் நட்புத் திறத்தினையும் கூரிய அறிவையும் புகழ்ந்து கொண்டான்.

தீயூட்டல்

சிறிது நேரத்திற்குள் வயந்தகன் உரைத்தவாறே நகரைச் சுற்றும் சூழத் தீப்பற்றிக் கொண்டு ஓங்கி எரிக்கத் தொடங்கிற்று. நீராட்டுக்கு வந்தவர்கள்

அனைவரும் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டும், கதறி அழுது புலம்பிக் கொண்டும் நகரை நோக்கி ஓடினர். வீடும், பொருளும் என்ன ஆகுமோ என்று ஏங்கினர். பகைவர் செயலாகவே இது இருக்க வேண்டும் என நொந்து பதை பதைத்தனர். அரசன் செய்வதறியாது திகைத்தான்.

**காவல் கடன்**

இந்தக் கலக்கத்தில் 'வாசவதத்தையை அவள் ஆசிரியனாகிய உதயணன் காப்பானாக! என யான் வேண்டிக் கொண்டதாக உதயணனிடம் கூறுங்கள்' என்று வாசவதத்தையின் தோழியர்களிடம் உரைத்து விட்டு அரசன் நகரினை நோக்கிச் சென்றான். அவனுரைப்படியே தோழியர்களும் வாசவதத்தையை அழைத்துச் சென்று உதயணனிடம் ஒப்படைத்தனர். தத்தை தன் உயிர்த் தோழியான **காஞ்சனமாலையுடன்** உதயணன் ஏறியிருந்த பிடியின் மேல் ஏறிக் கொண்டாள். வயந்தகனும் ஏறிக்கொண்டான். தானாகவே வந்து சேரும் நல்லகாலத்தை நினைத்து உதயணன் உள்ளுக்குள் பெருமகிழ்ச்சி கொண்டான்.

**தடை**

உதயணன் பிடியைச் செலுத்தத் தொடங்கினான். அப்பொழுது **வராகன்** என்பவன் வில்லும் கையுமாய் விரைந்தோடி வந்தான். யானை மீதிருந்த உதயணன் "வராக! அவ்வில்லை என்னிடம் கொடுத்துவிட்டு என் வாளினை வாங்கிக் கொண்டு யானைமீது ஏறிக் கொள்க' என்றான். அதுகேட்ட வராகன் வில்லினை நீட்டினான். அதனை வாங்கிய உதயணன் வாளினைத் தராது, ஏறிக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு

யானையை விரைந்து ஓட்டினான். வராகனால் ஏறிக் கொள்ள முடியவில்லை; ஏமாந்து போய் நின்றுவிட் டான். அரசன் தண்டிப்பானே என்ற கவலை அவனுக்கு மிகுதியாயிற்று. இவ்வேளையில் விரைந்து செல்லும் யானைமுன் யூகி உண்மை வடிவுடன் தோன்றினான்.

**வெல்க**

"விரைந்து செல்க! வெற்றி ஆகுக!" என்று வாழ்த்தி அனுப்பினான். அப்பொழுது உதயணனைத் தடுக்குமாறு ஆரவாரத்துடன் வந்து கொண்டிருந்த படைகளை யூகியும், அவனது ஆட்களும் வெட்டி வீழ்த்திக் கொண்டே முன்னேறினர். ஆயினும் உதயணனைத் தடுக்க வந்தவனாகிய வராகன் மட்டும் மீண்டும் உதயணனை நெருங்கினான். அவனை உதயணன் கண்டு, 'வராக! தத்தையை அவந்தி நாட்டுக்குக் கொண்டு சென்று காக்குமாறு மன்னவன் ஏவியுள்ளார். அதனைச் செம்மையான முறையில் யான் செய்து முடிப்பேன் என்று யான் கூறியதாகக் கூறுவா யாக!" என்றான். மன்னவன் ஆணை என்றவுடனே வராகன் மனம் மயங்கி நின்றுவிட்டான். ஆனாலும் சற்று நேரத்திற்குள் இதில் ஏதோ ஒரு வஞ்சகம் இருப்பதாகக் கருதிக் கொண்டு அரசனிடம் அறிவித்து விடுமாறு ஓடினான்.

**தவறன்று**

உலா மண்டபத்தில் அமைதியாக உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான் அரசன். அவனை அடிவணங்கி நடந்த நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கூறினான். உதயணன் வேண்டுகோளினையும் உரைத் தான். அரசன் கண்கள் சிவந்தன. தன்னை உதயணன்

இழிவுபடுத்திவிட்டதாக எண்ணிப் பெருஞ்சினங் கொண்டு 'வாசவதத்தையை மீட்டு, உதயணனைச் சிறைப்படுத்தி வருக' என்று வீரர்களுக்கு உத்தர விட்டான்.

உடனிருந்த சாலங்காயன் அரசனைத் தேற்றி "இச் செயல் தவறுபட்டதன்று' என்று தெளிவுபடுத்தி னான். அரசன் ஒருவாறு அமைந்து, அரசியிடம் சென்று நடந்ததைக் கூறாமலே, "உதயணனுக்குத் தத்தையை மணம் செய்து தருவதுபற்றி உன் கருத்து என்ன' என்று வினவினான். அவளும் "யானையை அடக்கி வந்த அழகனே அவளுக்கு உரியவனாதற்குத் தக்கவன் என எண்ணினேன்' என்றாள். அதன் பின்னர், நடந்த நிகழ்ச்சிகளை அரசிக்குக் கூறினான். அரசி மகளின் பிரிவுக்காகப் பெரிதும் கவலைப்பட்டாள். அந்தப்புர மகளிரும் கவலையுற்றனர். அரசன் தக்கவாறு அவர்களைத் தேற்றினான்.

### செலவு

யூகியின் ஏவலால் ஆங்காங்கு பதுங்கியிருந்த வீரர்கள், எதிர்த்து வரும் உஞ்சை வீரர்களைத் தாக்கி யானையின் செலவைப் பாதுகாத்துக் கொண்டிருந் தனர். யானை வயல், காடு, மலை, ஆறு ஆகிய நிலப் பகுதி நீர்ப்பகுதிகளைக் கடந்து பெருகிய பாலை நிலத்தில் விரைவாய்ச் சென்று கொண்டிருந்தது. இரவுப் பொழுதானமையால் விண்மீன்களைக் கொண்டே பொழுதறிந்து கொண்டு சென்றனர்.

### யானை இறப்பு

பருக்கைக் கற்கள் மிக்க பாலைப் பகுதியில் பகலில் செல்ல இயலாது என எண்ணி இரவோடு

இரவாக அதனைக் கடந்துவிட முயன்றனர். ஆதலால் யானையை விரைவாக ஓட்டினர். எனினும் வர வர யானை தளர்ச்சியுற்றது. முன்பு யூகி குறித்த எல்லையை அணுக வரும்போது 'நடக்க இயலாது' என்னும் நிலைமைக்கு ஆளாகிக் கீழே விழுந்தது. அதுகண்டு வருந்தி நால்வரும் கீழே இறங்கினர். தங்களுக்கு உதவியாக வந்த யானைக்கு நேர்ந்த துயரினை எண்ணி வருந்தினர்.

**மறைதல்**

வாசவதத்தைக்கும், காஞ்சனமாலைக்கும் துணையாக வயுந்தகனை வைத்துவிட்டு அருகில் இருந்த பொய்கைக்குச் சென்று நீர் கொண்டு வந்து யானைக்குரிய இறுதிக் கடன்களை முறையோடும் உதயணன் செய்து முடித்தான். அதன் பின்னர் சிறிது தூரம் நடந்து சென்றனர். ஆனால் வாசவதத்தையின் நடை மெலிவினைக் கண்டு மேலும் நடக்க விரும்பாதவர்களாய் ஒரு முள்ளிலவ மரக் கூட்டத்துள் போய் மறைவாகத் தங்கிக் கொண்டனர்.

**வேடர்**

கொடிய பாலைநிலமாகவும், கொலைக்கு அஞ்சாத வேடர்கள் வாழும் இடமாகவும் அப்பகுதி இருந்தபடியால், விடிந்த பின்னர் தங்கட்கு ஏதேனும் இடையூறு நேரக்கூடும் எனக் கருதிய வயந்தகன் "அரசே யான்! இடவகன் இருக்கும் புட்பக நகருக்கு இரவோடு இரவாகச் சென்று தக்க படைகளுடன் காலையில் மீள்வேன்; அதுவரை இங்கிருப்பீர்களாக" என வேண்டிக் கொண்டு, புட்பக நகரத்திற்குச் சென்றான்.

**புட்பகம்**

இமைத்தலையும் மறந்து உதயணன் காவல் புரிந்து கொண்டு மகளிர் இருவரையும் உறங்கச் செய்தான். பொழுதும் விடிந்தது. அப்பொழுது அப் பாலைநிலத்தில் வாழும் வேடர்களுக்கு யானையின் கால் தடம் காணப்படவே எவனோ ஒரு வணிகன் இரவில் வந்துள்ளான் என்றும், அவன் இதற்குள் இப் பாலைநிலத்தைக் கடந்திருக்க முடியாது என்றும் எண்ணி யானைத் தடத்தின் வழியே வந்தனர். சற்றுத் தொலைவினுள் யானை இறந்து கிடப்பதைக் கண்டனர். அதற்குமேல், நடந்து சென்ற கால் தடங்களைக் கண்டு பின் தொடர்ந்து கொண்டே முள்ளிலவம் பொதும்பை அடைந்தனர்.

அங்கே உதயணன் இருப்பதைக் கண்டு 'தப்பிச் செல்வதற்கு நினைத்து மறைந்து வந்து தங்கியிருக்கும் இவனைக் கொல்வோம்' என்று கூறிக் கொண்டு சுற்றி வளைத்து அம்புகளை மழைபோல் சொரிந்தனர்.

**போர்**

உதயணன் காஞ்சனமாலையினிடம் தத்தையைப் பாதுகாக்குமாறு கூறிவிட்டு, அம்புகளை ஏவினான். வேடர்கள் நாற்பத்தொன்பது பேர்களாக இருந்தும் உதயணன் சளைக்கவில்லை. மேலும் மேலும் கணை தொடுத்து உருத்தெரியாதவாறு பலரைச் சிதைத்துக் கொன்றான். எஞ்சி இருந்தவர்களும் இனித் தப்பிச் செல்ல இயலாது என்று எண்ணியவர்களாய், முள்ளிலவப் பொதும்பைச் சுற்றிலும் தீ மூட்டி விட்டு ஒருமுகமாக வளைத்துத் தாக்கினர். ஆயினும், மகளிரையும் பாதுகாத்துக் கொண்டு, வேடர்களையும்

அழித்துக் கொண்டே இருந்தான் உதயணன். இந்நிலைமையில் இவன் வில்லினை அறுத்தாலன்றித் தப்பிப் பிழைக்க இயலாது என அறிந்த ஒருவன் உதயணனது வில்லின் நாணினை அறுத்தான். இதனால் உதயணன் அம்பு தொடுக்க இயலாதவனாகி அவர்கள் தொடுக்கும் அம்பு மேல்படாதவாறு விற்கம்பினால் விலக்கிக் கொண்டிருந்தான்.

**புதையல்**

'வேடர்களே! அம்பு தொடுக்காதீர்; இவற்றைக் கொள்க' என்று கூறித் தன் அணிகலங்களைக் கழற்றி வைத்தான். அதன் பின்னர் வேடர்கள் சிறிது ஓய்ந்து 'நீங்கள் யார்?' என்று கேட்க, நாங்கள் உதயணனுடைய வணிகர்! பொருளீட்டிக் கொண்டுவந்தோம்; அவை அனைத்தையும் ஓரிடத்தே புதைத்து வைத்துள்ளோம். அதனைப்பெற விரும்பினால் நீங்கள் போர் செய்தலை விடுங்கள்' என்றான் உதயணன். அதுகேட்ட வேடர் ஒப்புக்கொண்டு, உதயணன் கைகளைக் கட்டிப் பிடித்துப் புதையல் இருக்கும் இடத்தினைக் காட்டுமாறு அழைத்துச் சென்றனர்.

புதைத்து வைத்திருந்தால்தானே புதையலைக் காட்டுவான். அங்கும் இங்கும் தேடித் தேடிப் பொழுதைக் கழித்தான். எந்த இடத்திலும் புதையல் காணப்படவில்லை. 'சோலையின் செறிவும், நெருப்பின் புகையும், வழிநடந்த களைப்பும் பொருளை எங்குப் புதைத்தோம் என்பதனைத் தெரியாத அளவில் தடுக்கின்றன' என்று சொல்லிக் கொண்டே தேடினான். வேடர்களுக்கு உதயணன் செயல் கோவத்தை எழுப்பிற்று. 'புதையலைக் காட்டாவிடில் செத்தாய்'

என்று எச்சரித்துக் கொண்டே அவன் பின் அலைந்து திரிந்தனர். அப்பொழுது சற்றுத் தூரத்தே பெரும் படையொன்று வருவதை உதயணன் கண்டான். வயந்தகன், இடவகன் படையை அழைக்கச் சென்றா னல்லவா! அப்படையே இது. இதை உதயணன் அறிந்து கொண்டான்.

**இடவகன்**

வேடர்கள் படையினைக் கண்டவுடன் ஓடி ஒளியலாயினர். உதயணனையும் ஒளிந்து கொள்ளு மாறு வற்புறுத்தினர், உதயணன் புன் முறுவலுடன் நின்றான்; படை அவனை நெருங்கியது. வயந்தகனுடன் வந்த இடவகன் உதயணனைப் பணிந்து, அவர்களை அழைத்துக் கொண்டு சயந்தி நகரம் சேர்ந்தான்.

**வரவேற்பு**

சயந்தி நகரத்தினர் வீதிகளையும் தெருக்களையும் வீடுகளையும் அழகுபடுத்தி அகமகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆடலும் பாடலும் நிகழ்த்தித் தங்கள் மகிழ்ச்சியைப் புலப்படுத்தினர். வாசவதத்தையின் அழகினைக் கண்டு 'உதயணனுக்கு ஏற்ற ஒருத்தி இவளே! இவள் முன் செய்த தவம் பெரிது போலும்!' என்று வாழ்த்தினர்.

**மணம்**

உதயணன் தத்தையுடன் தனக்குரியதான அரண் மனையை அடைந்து இன்பமாக இருந்தான். ஒருநாள் அரசச் சிறப்புக்கள் அனைத்தும் பெற்றவனான வள்ளுவ முதுமகன் ஒருவன் யானை மீது ஏறி இருந்து 'நகரத்தவர்களே! அறம் வளர்க! மறம் தொலைக! உஞ்சை வேந்தன் மகளை உதயண மன்னன் மணம்

புரியு நாள் இன்ன நாள் ஆகும்' என்று பறையறைந் தான்.

அதுகேட்ட முதியவர்கள் தங்கள் வீட்டுத் திருமணமாக எண்ணி மகிழ்ந்தனர். காளையரும் கன்னியரும் தங்கள் தங்கள் திருமணமாகவே எண்ணிக் களிப்புற்றனர். வள்ளுவன் நகரத்தார்க்கு அறிவித்த நன்னாளில் பலவகைச் சிறப்புகளுடன் உதயணனுக் கும் வாசவதத்தைக்கும் முறைப்படி திருமணம் நடந் தேறியது. உண்பன உண்டு, உடுப்பன உடுத்து, காண்பன கண்டு, கேட்பன கேட்டுத் தங்கள் வாழ்க்கையை இன்ப வெள்ளமாக ஆக்கிக் கொண்டு இவர்கள் சயந்தி நகரத்தே இருந்தனர்.

**யூகி ஆணை**

உச்செயினியில் இருந்த யூகி, "சிறைப்பட்டிருந் தவன் என்பதை கூடச் சிறிதும் எண்ணாது உதயண னுக்குத் தன்மகளை விரும்பித் தந்த பிரச்சோதனன் பெருந்தன்மையே பெருந்தன்மை" என்று ஊரெல்லாம் அறியுமாறு உரைத்துவிட்டு, அங்கே இருந்த தன் தொண்டர்களையும், நண்பர்களையும் ஒருவர் அறியாமல் ஒருவராக உதயணன் இருக்கும் இடத்தை அடையுமாறு ஏவினான்.

**பொறி வண்டி**

அதன் பின்னர்த் தனக்கு நண்பனாக இருந்த சாதுவன் என்னும் குயவனது வீட்டை அடைந்து அங்கே இருந்தவளும், தனக்கு முன்னரே அறிமுகமான வளும், வாசவதத்தைக்குத் தாயாக இருந்து காத்து வந்தவளுமான **சாங்கியத்தாய்** என்பவளைக் கண் டான். அவள் தத்தையின் பிரிவால் வருந்தி இருந்தாள்.

ஆதலால் அவளையும் அழைத்துக் கொண்டு, தன் நண்பனான யவனப் பாடித்தலைவன் என்பவனைக் கண்டான். அவன் யூகி அல்லலின்றி விரைவில் செல்லுமாறு பொறியினாலே இயங்கும் வண்டி ஒன்றினைச் செய்து தந்தான். அதில் தானும் சாங்கியத் தாயும் ஏறிக் கொண்டு, புட்பக நகரம் நோக்கிச் செலுத்தினான்.

**யூகி கவலை**

புட்பக நகரம் செல்லு முன்னரே, வண்டியை ஓரிடத்தே பிரித்துப் பாதுகாப்பாக வைத்து விட்டுச் சாங்கியத் தாயைப் பின்பு வருமாறு சொல்லி, அவளுக்கு முன்னாகவே யூகி புறப்பட்டான். யாரும் அறியாமல் இடவகன் இருக்கும் அரண்மனையை அடைந்து உதயணன் உஞ்சையை விட்டுப் பிரிந்தது முதல் இதுகாறும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்தான். உதயணன் துன்பம் ஏதுமின்றி வந்து சேர்ந்து வாசவதத்தையை மணம் செய்து கொண்டு இன்பத்துடன் வாழ்வதைக் கேட்டு மகிழ்ந்தா னெனினும், வேறு சில செய்திகளைக் கேள்விப்பட்டு வருந்தினான்.

**உதயணன் இன்பம்**

உதயணன் வாசவதத்தையைச் சிறிது பொழுதும் விட்டுப் பிரியாது அவள் இருப்பிடமே தஞ்சமாக வாழ்கின்றான் என்றும், தன் தலைநகரான கௌசாம்பியை ஆருணியரசன் கைப்பற்றிக் கொண்டு ஆண்டு வருதலை அறிந்தும் அதுபற்றிச் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை என்றும், தன் தம்பியர்களான பிங்கல கடகர் நாட்டை விட்டு விரட்டப்பட்டுத் தொல்லை

யுறுவதை நீக்க நினைக்கின்றான் இல்லை என்றும் இடவகன் கூறிய உரைகளைக் கேட்ட யூகி கவலை கொண்டான். உதயணனது இடையறாத இன்ப நினை வால் நாடும் நகரும் துன்புறும் என்று எண்ணிய யூகி அதனை மாற்றியமைக்க நினைத்தான்.

**பிரிப்புத் திட்டம்**

அப்பொழுது அங்கு வந்து சேர்ந்த சாங்கியத் தாயுடன் தனித்துச் சென்று உதயணனையும், வாசவதத் தையையும் சிறிதுகாலம் நாட்டின் நலம் கருதிப் பிரித்து வைக்க வேண்டியது கட்டாயமாகின்றது என்றும், அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டு மென்றும் வேண்டிக் கொண்டான்.

யூகியின் செயல்கள் அனைத்தும் நாட்டு நலனுக்கே என்பதைத் தெளிந்தறிந்த சாங்கியத்தாய் வாசவதத்தையை உதயணனிடமிருந்து பிரித்து வைக்கும் செயலுக்கு ஒப்புக்கொண்டாள்.

அதற்குப்பின், “வரும் வழியில் அவல் உண்டு விக்கியதால் யூகி இறந்தான்” என்று ஊரறியுமாறு இடவகன் முதலானவர்களைக் கொண்டு பரப்பினான். பேராற்றல் உடையவனான யூகி இறந்தான் என்ற சொல்லைக் கேட்ட மக்கள் ஆறாத்துயர் அடைந்தனர். சாங்கியத்தாய் உதயணனும் வாசவதத்தையும் இருக்கும் சயந்தி நகரம் நோக்கிச் சென்றாள்.

சாங்கியத்தாய் உதயணனைக் கண்டாள். அவன் அவளை அன்பொடு வரவேற்று நல்லுரை கூறினான். ‘யூகி இன்னும் வரவில்லையே ஏன்?” என்றும் கேட்டான். யூகியுடன் வந்தமை பற்றிக் கூறி, ‘பின்னாக வருவேன், நீர் முன்னாகச் செல்க’ என்று என்னை

அனுப்பிவிட்டு இடைவழியில் தங்கியுள்ளான் என்றாள். அதன்பின் வாசவதத்தையைக் காணும் விருப்புடன் அவள் இருக்குமிடத்தை அடைந்தாள்.

## பிரிப்பு

தத்தைக்குத் தாய்போலவே சாங்கியத்தாய் இருந்தவளாதலின் மகிழ்ச்சிக் கண்ணீர் பொழிய மார்புறத் தழுவிக் கொண்டு இன்புற்றாள். தான் வந்தபின் உஞ்சையில் நடைபெற்றனவற்றைக் கேட்டு அறிந்தாள். அதற்குப்பின் யூகி உரைத்தவற்றைத் தக்க சமயத்தில் நிறைவேற்ற வேண்டியதன் தேவையை உணர்ந்து தனித்த இடம் ஒன்றற்கு அவளை அழைத்துச் சென்று உதயணன் நிலைமையினை எடுத்துரைத்தாள். இவ்வாறு இன்பத்திலேயே காலம் கழிக்கும் மன்னவனால் மக்கட்கு மீளாத் துன்பமே அன்றி இன்பம் இல்லை என்றும், பகை வேந்தர்களுக்கு இவன் செயல் மகிழ்வூட்டும் என்றும் கூறி யூகியின் திட்டங்களையும் உரைத்தாள். அவளும், நல்லதே நினைத்து நல்லதே செய்யும் யூகியின் செயல்கள் முற்பொழுது துன்பம் தரினும், பிற்பொழுது இன்பம் தருவதே என்னும் தெளிவு கொண்டு ஒப்பினாள். இதனை யூகிக்குச் சாங்கியத்தாய் அறிவித்தாள்.

## யூகி மீண்டும் இறப்பு

யூகி தன் திட்டத்தைச் செயலாக்கத் தொடங்கி னான். தொடக்கச் செயலாகத் தான் இறந்ததாக உதயணன் அறியச் செய்ய எண்ணினான். அதனால் ஒரு, முகத்தை வரைந்து அதற்கு நான்கு கண்கள் போட்டு, அவற்றுள் முதற் கண்ணை மட்டும் மழுங்கியதாக அமைத்தான். சாங்கியத் தாயினிடம் அப்

படத்தினைத் தந்து உதயணனிடம் சேர்க்குமாறு கோரினான். அப்படியே அவள் செய்தாள். உதயணன் ஓவிய நுணுக்கம் வல்லவன் ஆதலால் கண்களே அமைச்சர் என்றும், தன் நான்கு அமைச்சர்களில் முதல்வனான யூகியே மழுங்கிய கண் என்றும் அறிந்து, அவனுக்கு யாதோ துயரம் உண்டென்றும் எண்ணிக் கவலைகொண்டான். சாங்கியத்தாயும் முன்திட்டமிட்டபடி “அவல் உண்ணும்போது விக்கல் ஏற்பட்டு யூகி இறந்தான்” என்று உரைத்தாள். யூகி இறந்தான் என்னும் சொல் உதயணனுக்குக் காதிலே வேலைச் செலுத்தியது போலாகத் துயர் தந்தது. பலவாறாகப் புலம்பி அழுதான்.

### குறி கேட்டல்

அரசனது அவல நிலைகண்டு வருந்திய அமைச்சர்கள் பலவாறாய்த் தேற்றினர். உருமண்ணுவா, மன்னவனைத் தேற்றுவதில் மிகுந்த அக்கறை எடுத்தான். நீர் விளையாட்டு, பொழில் விளையாட்டு இவற்றால் உதயணனை இன்புறுத்தினான்.

அடுத்திருந்த மலைச் சாரலுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த முனிவரொருவரின் இருப்பிடத்தை அடைந்தான். அவர் உதயணனை வரவேற்று இன்சொல் கூறி, நிகழ்ந்தவற்றையெல்லாம் முகக் குறிகளாலும், வேறு பல நிகழ்ச்சிகளாலும் அறிந்து கூறி, “யூகியை மீண்டும் அடைவாய்” என்றும், இன்பப் பொழுது போக்கிற்குச் சிறிது இடையூறு உண்டாகக் கூடும் என்றும் எடுத்துரைத்தார். உதயணன் அவர் உரையால் சிறிது கவலை நீங்கினான்.

### விரிசிகை

இவ்வாறு இருக்கும்போது ஒருநாள் வேறொரு முனிவரது திருமடத்தின் அருகே உதயணன் வயந்தக னுடன் இருந்தான். அப்பொழுது வாசவதத்தை காஞ்சனையுடன் இயற்கைக் காட்சிகளைக் கண்டு வருவதாக விடைபெற்றுக் கொண்டு சென்றாள். அவள் சென்ற பிறகு அங்குறைந்த ஒரு முனிவரின் செல்வச் சிறுமியான விரிசிகை என்பவள் அழகனாகத் திகழும் உதயணனைக் கண்டாள். அவன் மீது ஏற்பட்ட அன்பினால் விளையாட்டுப் பொருள்களை ஓரிடத்தே வைத்துவிட்டு விதவிதமான மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து உதயணனிடம் தந்து மாலையாகத் தொடுத்துத் தனக்குத் தருமாறு வேண்டிக் கொண்டாள்.

### மாலை மயக்கம்

அச் சிறுமியின் அழகில் மயங்கிய உதயணன் அழகுறப் பலவகை மாலைகளாகத் தொடுத்துத் தந்தான். அவற்றைச் சூட்டும் விதம் அறியாது சிறுமி மயங்கினாள். அதனால் அவளுக்குத் தானே தக்கவாறு சூட்டிப் 'போய் வா' என்று அனுப்பினான். அச் சிறுமி யும் மகிழ்ச்சி தாங்காதவளாய் நடந்து செல்லும்போது அங்கே வந்து கொண்டிருந்த வாசவதத்தை அவளைக் கண்டாள். இம் மாலைகளை உதயணனே தொடுத்துச் சூட்டியுள்ளான் என்பதனை அறிந்த அவள் பெரிதும் வருந்தினாள். உதயணனோ பலவாறாகத் தேற்றி யுரைத்தே அவள் சினத்தைப் போக்க வேண்டி நேரிட்டது.

**சுரங்கம்**

இவர்கள் நிலைமை இவ்வாறாக, யூகி இலாவண நகர் என்னும் நகரினை அடுத்துத் தங்கியிருந்தான். அவ்விடத்திலிருந்து உதயணன் வாழும் மாளிகை வரை சுரங்கம் ஒன்றைத் தோண்டினான். அவ்வேலையும் முற்றுப்பெற்றது. இந்நிலையில் ஒருநாள் வாசவதத்தை உதயணனிடத்தில் சோலைக்குச் சென்று மலர் பறித்து வந்து மாலை கட்டித் தருமாறு வேண்டினாள். அவள் வேண்டுதலை நிறைவேற்றக் கருதிய உதயணன் சோலை நோக்கிச் சென்றான்.

தத்தையினைப் பிரிந்து சென்றிருக்கும் இப்பொழுதே தக்கவாய்ப்பான பொழுதெனக் கருதிய யூகி அரண்மனையைச் சூழவும் நெருப்பு மூட்டச் செய்தான். இச்செயல் பகைவரால் ஏற்பட்டது என்றும் எங்கும் பரப்பினான். வாசவதத்தையையும், சாங்கியத் தாயையும் சுரங்கத்திற்குள் நுழையுமாறும் ஏற்பாடு செய்தான். வாசவதத்தை வருந்தினாள்; நடுங்கினாள். உதயணனை நினைத்து ஏங்கினாள், அவளைச் சாங்கியத்தாய் தேற்றி வைத்து, 'யூகியின் சூழ்ச்சியே இது' என்று கூறினாள். யூகியும் தத்தையிடம் பொறுத்துதவக் கேட்டுக்கொண்டு உதயணனது பிரிவினை ஆற்றியிருக்குமாறு வேண்டிக் கொண்டான். மூவரும் சுரங்கத்தே மறைந்து இருந்தனர்.

**நகரில் தீ**

சோலைக்குச் சென்ற உதயணன், நகரம் புகையால் சூழப்பட்டு இருப்பதை நெடுந் தொலையில் இருந்து கண்டவனாய் வருந்தி அரண்மனையினை நோக்கி விரைந்து வந்தான். "வாசவதத்தைக்கு என்ன நேர்ந்

ததோ” என்று வருந்தினான். “நெருப்புக்கு ஆட்பட்டு வாசவதத்தை இறந்தாள்’ என்ற சொல் நஞ்சு தடவப் பெற்ற வேல் ஒன்று காதில் நுழைந்து சென்றதுபோல வீழ்ந்து புரண்டு அழுதான்; முட்டினான்; மோதினான். நண்பர்கள் எவ்வெவ்வாறு முயன்றும் அவன் பட்ட கவலையை அவ்வளவு எளிதில் போக்கிவிட முடிய வில்லை. துன்பமே வடிவமாகிவிட்டான் உதயணன்.

**இராசகிரியம்**

சுரங்கத்திலிருந்த யூகி, வாசவதத்தை, சாங்கியத் தாய் ஆகிய இருவரையும் அழைத்துக் கொண்டு சண்பை என்னும் நகருக்குச் சென்று ஒரு வணிகன் வீட்டிலே தங்கியிருந்தான். உதயணன் கவலையுடன் திரிவதை அறிந்த, பாஞ்சாலராசன் கௌசாம்பியில் இன்பமாக இருந்தான். இச்செயல் அமைச்சர்களுக்கும் நண்பர்களுக்கும் கவலையளித்தது. உதயணனது துன்ப நிலையைப் போக்குமாறு எண்ணி ‘இழந்தவர்களைப் பெற வைக்கும் மந்திரமும் உண்டு; அந்த மந்திரம் வல்லவர்களும் உண்டு’ என்றுகூறி உதயணனை அழைத்துக் கொண்டு இராசகிரியம் என்னும் இடத்தைச் சேர்ந்தனர்.

**காகதுண்டகர்**

அங்கிருந்த காகதுண்டகர் என்னும் முனிவரிடம் உதயணனது நிலையினை எடுத்துரைத்துத் தக்கவாறு நல்லுரை கூறவேண்டிக் கொண்டனர். அவரும் இசைந்து ‘இரண்டு திங்கள் இவ்விடம் தங்கியிருந்தால் யாம் ஒரு வேள்வியினைச் செய்து முடித்து, வாசவதத் தையைப் பழைய உருவத்தில் தருவோம்’ என்றார்.

அதனால் உதயணன் அமைச்சர்கள், நண்பர்கள், வீரர்கள் ஆகியவர்களுடன் அங்கே தங்கினான்.

**காமன் விழா**

ஒருநாள் அந்நகரத்தில் காமன்விழா நடை பெற்றது. அவ்விழாவிற்கு அந்நகரத்து அரசன் மகள் பதுமாவதி என்பவள் திரைமூடிய சிவிகை ஒன்றில் சென்றாள். தற்செயலாக அவளைக் கண்ட உதயண னுக்கு அவள் வாசவதத்தையாகவே தோன்றினாள். அவள்மேல் தன் அன்பினைச் செலுத்தினான். அவளும் உதயணன் அழகில் ஈடுபட்டாள். இதனால் நாள்தோறும் உதயணன் தங்கியிருக்கும் இடத்தின் வழியே தன் ஊர்தியினைச் செலுத்திக் கொண்டு வந்து தன் அன்புடைமையை வெளிப்படுத்தினாள்.

**கொடை விழா**

ஒருநாள் அவள் அந்தணர்க்குக் கொடை வழங்குகின்றாள் என்பதறிந்த உதயணன் இதுவே தக்க பொழுது என்று தானும் அந்தண உருவுடன் மறைந்து சென்று அவளைத் தனித்துக் கண்டு இன்புற்று மீண்டான். பின்னர், மாணகன் என்னும் மாற்றுப் பெயருடன் உதயணன், புதையல் கண்டு பிடிக்கும் அறிவன் ஆகவும், நீரோட்டம் காணும் நெறியறிந் தோன் ஆகவும், கூறி அரசனைத் தன் வழிக்குக் கொண்டு வந்து, அவனால் நன்கு மதிக்கப் பெற்று இருந்தான். இவ்வாறிருக்கும் நாளில் பதுமாவதி தன் சிவிகையிலே எவரும் அறியாவண்ணம் உதயணனை ஏற்றிச் சென்று அவனது யாழ் நலத்திலும், இசை இன்பத்திலும் ஈடுபட்டுப் போற்றினாள்.

**பகைசூழ்தல்**

இவர்கள் இவ்வாறிருக்கும் பொழுது இராசகிரி யத்தைப் பகையரசர் பலர் கூடித் தங்கள் நால்வகைப் படையுடனும் வளைத்துக் கொண்டனர். இராசகிரிய அரசனான தருசகன் செய்வதறியாது திகைத்தான். பதுமாவதி உதயணனுக்கு இச் செய்தியைத் தெரியப் படுத்தினாள். அவனும், "பகைப் படையை வென்று வருவேன்" என்று உறுதியளித்துவிட்டு ஒரு வணி கனைப் போலாகப் புறப்பட்டுச் சென்றான். அவன் வீரர்களும் உதவிக்கு வந்தனர். பகைவர்களின் பாடிவீட்டுக்குச் சென்று இராசகிரிய வேந்தனுக்குப் பகைவர்கள் போலாகக் காட்டிக் கொண்டு அவர் களுடன் தங்கினர்.

நள்ளிரவுப் பொழுதிலே எழுந்து அங்கிருந் தோரைத் திடுமெனத் தாக்கினர். எதிர்பாராத தாக்குதல் அல்லவா! தாக்குவோர் இன்னார் என அறியாராய் இரவுப் பொழுதாகலின் அங்கும் இங்கும் சிதறியோடி விட்டனர். தருசகன், போருக்கு யாது செய்வது என்று ஏங்கிக் கொண்டிருந்த நேரம் அது. அந்நேரத்தே, உதயணன் நட்புக் காரணமாகத் தமக்கு வெற்றி தேடித் தந்ததாகவும், பகைவர்கள் ஓடித் தொலைந்ததாகவும் சிலர் செய்தி கொண்டு வந்து சேர்ந்தனர். இது கேட்ட தருசகன் வியப்புற்று உதயண மன்னனைச் சிறப்பாக வரவேற்று விருந்து செய்வித்து மகிழச் செய்தான். தருசகனுக்கு மாணகனே உதயணன் என்பது தெரியாதல்லவா!

**போர்**

இரவுப்பொழுதில் ஓட்டம் பிடித்த பகை மன்னரும், படை வீரரும் விடிந்தவுடன் ஒன்றுகூடி ஆராய்ந்தனர்.

முன்பின் அறியாதவர்களை நம்பியதன் கேட்டினை நினைத்து வருந்தினர். அனைவரும் ஒன்றுகூடித் தாக்குவதென முடிவு கொண்டனர். அதனால் மகத நாட்டுள் புகுந்து அழிவு வேலைகள் செய்யத் தொடங்கினர். இதனை ஒற்றர் தருசகனுக்குத் தெரிவிக்க அவனே படைத்தலைமை ஏற்றுப் போருக்குப் புறப்பட்டான். ஆனால் உதயணன் தான் போருக்குப் புறப்படுவதாகவும், தன்னுடன் படைகளை அனுப்பி வைக்குமாறும் வேண்டிக் கொண்டான் தருசகன் அமைச்சர்களுடன் ஆராய்ந்து படைகளை அனுப்ப ஒப்பினான்.

**கேகயன்**

அவ்வமயம் கேகயத்தரசன் தன்னைப் போருக்கு அனுப்பி வைக்குமாறு தருசகனிடம் வேண்டினான். கேகயத்தரசன் தருசகனது தங்கை பதுமையைத் திருமணம் முடிக்கும் நோக்கத்துடன் வந்திருந்தான். தருசகனும் அதற்கு ஒப்புதல் தந்திருந்தான். அவன் போருக்குச் செல்ல விரும்பியமையால், அவனையே படைத் தலைவனாக்கி வைத்தான். உரிய முறையில் காத்து உதவுமாறு உதயணனைத் தருசகன் வேண்டிக் கொண்டான்.

**தலைவன் தலை**

நண்பர்கள் முன்னும் பின்னும் வர உதயணன் படையொடும் போர்க்களம் சேர்ந்தான். போர் தொடங்கி உச்ச நிலையில் நடந்து கொண்டிருந்தது. கேகயத்தரசனே படையின் முன் வரிசையில் இருந்தான். அவனுக்குப் பின் உதயணன் இருந்தான், பகைவேந்தருள் ஒருவன் கேகயத்தரசன் தலையை வெட்டி

யுருட்டினான். உதயணன் கடுமையாகப் போரிட்டான். உப்புமலை கரைவது போலப் பகைப்படை கரைந் தோடியது. உதயணன் வீரர் வெற்றி முரசு அறைந்தனர். இதனை அறிந்த தருசகன் உதயணனைத் தழுவிக் கொண்டு தன் அன்பினைப் புலப்படுத்தினான். ஆயினும் கேகயத்தரசன் மாண்ட செய்தி தருசகனது வெற்றிக் களிப்பினை மட்டம் தட்டிவிட்டது. இருந்தாலும் கவலைக்கிடையே கேகயத்தரசனுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தான் தருசகன்.

**நடிப்பு**

கேகயத்தரசன் பதுமாவதியை மணக்க இருந்த வன் அல்லவா! அந்தக் காரணத்தால்தானே உதயணன் முதலானோர் அவனை முற்படையில் நிறுத்தி உதவி செய்வது போலாக நடித்துப் பகைவர் வெட்டி வீழ்த்தத் துணைபுரிந்தனர். அவன் அழிவில்தானே உதயண னுக்கு மகிழ்ச்சி இருக்கிறது! இதற்கும் தருசகனே ஏற்பாடு செய்தான். தன் தங்கை பதுமையினிடம் சென்று, உதயணனை மணந்து கொள்வதைத்தான் விரும்புவதாகக் கூறிவருமாறு அமைச்சன் ஒருவனை அனுப்பினான். அவ்வாறே உதயணனுக்கும் பதுமையை மணந்து கொள்ளுமாறு வேண்டி, அறிவிக்கக் கோரினான்.

**பதுமை மணம்**

பதுமாவதி, அமைச்சனது உரைகேட்டு இவன் கூறும் உதயணன் நம் மாணகனே ஆயின் மணம் செய்வேன்; இல்லையேல் மடிவேன்' என்று நினைத்துக் கொண்டு அமைதியாக இருந்தாள். உதயணன் திருமண

விருப்பு இல்லாதவன் போலாகப் பேசி, ஒருவாறு ஒப்புவதுபோல் ஒப்பினான். ஆனாலும் அவனுக்கு ஒரு கவலை ஏற்பட்டது. பதுமை தான் இன்னார் என அறியாமல் திருமணத்திற்கு ஒப்பமாட்டாளே; மறுத்து விட்டால் என்ன செய்வது என்பதே அக்கவலையாகும். அதனால் பதுமையின் தோழி யாப்பியாயினியின் வழியாக 'மாணகனே உதயணன்' என்பதை அறிவித் தான். இதன் பின்னர் பெருஞ்சிறப்புடன் திருமணம் நடந்தேறியது. இந்த மகிழ்ச்சியுடனே கௌசாம்பியைத் தன் கைக்குள் கொண்டு வந்துவிடவேண்டும் என்றும் உதயணன் திட்டம் தீட்டினான். அவனது கருத்தை நிறைவேற்றுவதற்குத் தருசகன் முன்நின்றான்.

**வெற்றி**

உதயணனுடைய தம்பிமார்களான பிங்கல கடகரும் உதயணனிடம் தம் படையொடும் வந்து சேர்ந்தனர். எல்லாம் நன்மையாகவே நடப்பதை எண்ணி, வெற்றிபெற்றோம் என்ற விம்மிதத்தோடு போர்க்களம் சேர்ந்தனர். படையின் வருகை கண்ட ஆருணி அரசன் பதைபதைத்தான்! எதிர்த்து நிற்க இயலாதவனாய்த் தொலைந்தான். அவன் படைகளுள் இறந்தன போக எஞ்சியன ஓட்டம் பிடித்தன. உதயணன் வெற்றி வீரனாகக் கௌசாம்பியுள் நுழைந் தான் உதயணன் தன் நாட்டை மீண்டும் ஆளப்போவது குறித்து மக்கள் மகிழ்ந்தனர்.

உதயணன் பதுமாவதியுடன் இருந்து ஆராய்ந்து நாட்டுக்கு நன்மையான காரியங்களைச் செய்தான். நண்பர்களை அழைத்துப் பொன்னும் பொருளும் தந்து பெருமைப்படுத்தினான். தன்னைச் சுமந்து இடைவழி

யில் இறந்துபோன யானைக்குக் கோயில் கட்டிவைத்து வழிபாடு நடத்தினான். இவ்வாறெல்லாம் அவன் பல வழிகளில் ஈடுபட்டு இருந்தாலும் வாசவதத்தை யூகி ஆகிய இருவரையும் பிரிந்தமை பெருந்துயர் தந்து கொண்டே இருந்தது.

**இறந்தவர் பிறந்தவர்**

ஒருநாள் துயிலும் பொழுது ஒரு தேவமங்கை தாமரைப்பூ ஒன்றைத் தருவதாகக் கனவு கண்டான். அக் கனவின் நுட்பத்தினை அறியுமாறு முனிவர் ஒருவரை நாடினான். அவர் 'வாசவதத்தை இறக்க வில்லை; அவளை நீ பெறுவாய்; பெறுவதுடன் கந்தருவ உலகத்தை ஆளக்கூடிய மைந்தன் ஒருவனையும் பெறுவாய்' என்றார். இதனைக் கேள்வியுற்ற பின்னர், உதயணன் 'வாசவதத்தையை யான் என்று அடை வேன்' என்ற ஏக்கத்துடனேயே வாழ்ந்தான். பதுமா வதியையும் மறந்து கவலைமயமாகவே பொழுதைக் கழித்தான். இதனை அறிந்த வயந்தகன் இன்னும் வாசவதத்தையைப் பிரித்து வைத்திருப்பது தக்கதன்று என்றறிந்து, "நாம் முன்பு மகதத்தில் கண்ட முனிவர் இங்குள்ள வனம் ஒன்றில் வந்து தங்கியுள்ளார் அவரைக் கண்டு வரலாம்' என்று உதயணனை அழைத்துச் சென்றான்.

வயந்தகனுடன் சென்ற உதயணன் முனிவரை உற்று நோக்கி, 'இவன் நம் அன்பன் யூகியேதான்! முனிவனல்லன்' என்று தெளிந்து தழுவிக் கொண்டு மகிழ்ந்தான். அதன் பின்னர் வாசவதத்தையையும் உதயணன் கண்டு கவலையைப் பறக்கடித்தான். அனை வரையும் அழைத்துச் சென்று பதுமாவதிக்கு அறிமுகப்

படுத்தி வைத்தான். பதுமாவதியும் வாசவதத்தையும் பேரன்பு செலுத்திவர உதயணன் மகிழ்வுடன் இருந்தான்.

**மானனீகை**

வாசவதத்தைக்கும், பதுமாவதிக்குமாக உதயணன் 1008 தோழியர்களைத் தந்துதவினான். அவர்கள் அனைவரும் பாஞ்சால அரசியின் அந்தப்புரத்தே இருந்து கைப்பற்றப் பெற்றவர்கள் ஆவர். அவர்களை இரண்டாகப் பிரித்துத் தங்கள் அடியர்களாக வாசவதத்தையும், பதுமாவதியும் வைத்துக் கொண்டனர். ஒரு நாள் அவர்களுக்குள் பந்தாட்டப் போட்டி ஒன்று நடத்துமாறு ஆசை பிறந்தது. அதனால் தங்கள் தங்கள் குழுவுடன் பந்தாட்டம் ஆடினர். பொதுவாக, மகளிர் பந்தடிக்கும் இடத்திற்கு அரசர் முதல் ஆண்கள் எவரும் வரக்கூடாது. ஆனால் உதயணனுக்கு அவர்கள் ஆட்டத்தைக் காண வேண்டுமென்று பேராசை ஏற் பட்டது. அதனால் தான் பெண்வேடம் இட்டுக்கொண்டு பந்தடிக்கும் இடத்திற்குச் சென்று ஆட்டத்தைக் கண்டு களிப்புற்றான். ஒருவரை ஒருவர் வெல்லுமாறு பந்தாடினர். அவ்வாட்டத்தில் வாசவதத்தையின் அடியாளான மானனீகை என்பவள் எல்லோரையும் வென்று நிகரற்று விளங்கினாள். அவளின் அழகும், பந்தாட்டத் திறமும் உதயணனை மிகவும் கவர்ந்து விடவே அவள் மீது அளவிறந்த ஆசை கொண்டான்.

**வண்ண மகள்**

அந்த ஆசையினால் மானனீகையை வாசவதத்தையின் வண்ண மகளாக்கி வைத்தான். வாசவதத்தை மருட்சியடையுமாறு அழகுபெறப் புனைந்து விட்டாள்

மானனீகை. அதனால் வியப்புக் கொண்ட தத்தை, தன் கோலத்தை உதயணனுக்குக் காட்டுமாறு விரும்பி அவனிடம் வந்தாள். உதயணன் மானனீகைமீது பற்றுக்கொண்டிருந்தான் அல்லவா! அதனால் புனைகோலம் சரியில்லை என்றுகூறி அதனை அழித்து விட்டுத் தானே புனைந்தான். தத்தையின் நெற்றியிலே மானனீகை அறிந்ததான யவன மொழியில் மணக்குழம் பினால் தன் ஆசை புலப்படக் கடிதமே எழுதி விட்டான். மானனீகைக்கு தான் புனைந்த புதுக் கோலத்தைக் காட்டி வருமாறும் ஏவினான். தத்தையின் புதுக் கோலத்தைக் கண்ட மானனீகை, அரசனின் தவறான எண்ணத்தை அறிந்து வருந்தியவளாய் 'இக்கோலம் சரியில்லை' என்றுகூறி அழித்துவிட்டு மறுப்புக் கடிதம் எழுதி உதயணனிடமே அனுப்பி வைத்தாள். அதனை உதயணன் கண்டான். முன்னைப் போலவே புனைகோலத்தை அழித்துவிட்டு "மான னீகை! நீ என் ஆசையை நிறைவேற்றாவிடில் என் உயிர் போய்விட்டதாகக் கருதுக" என்று எழுதினான். பாவம்! மன்னவன் நிலைமைக்காக அஞ்சிய மான னீகை வேறு வழியின்றி ஒப்புக்கொண்டாள்.

**ஐயம்**

வாசவதத்தைக்கு, உதயணனும் மானனீகையும் மாற்றி மாற்றிப் புனைந்தது பற்றி ஐயம் ஏற்பட்டது. அதனால் அவர்கள் நடவடிக்கைகளைக் கவனித்து வருமாறு காஞ்சனமாலையை அனுப்பினாள். உதயண னும் மானனீகையும் அன்றிரவு ஒரு மண்டபத்தில் சந்தித்து மகிழ்ந்தனர். இதனைக் காஞ்சனமாலை கண்டறிந்து தத்தைக்குக் கூறவே, அவள் பெருஞ்சினங் கொண்டாள். மானனீகையை ஓர் அறையில் போட்டு

அடைத்து வைத்தாள். அவளைப் போலாகவே தான் உடை உடுத்துக் கொண்டும், புனைவு கோலம் செய்து கொண்டும் குறிப்பிட்ட இரவுப் பொழுதில் பழைய மண்டபத்தை அடைந்து வாசவதத்தை இருந்தாள்.

### மானும் தேனும்

அங்கு வந்த உதயணன் மானனீகையே இருக்கிறாள் என்று எண்ணி "மானே தேனே மானனீகாய்" என்று ஆசை மொழிகளைக் கொட்டினான். சிறிது நேரம் அமைதியாக இருந்தாலும், உள்ளம் வெதும்பியிருந்த தத்தையால் அதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதனால் "மானும் தேனும் மானனீகையும் யானல்லேன்; யான் வாசவதத்தையே" என்றாள். உதயணன் இதனைக் கேட்டு வெட்க முற்று ஓடிவிட்டான்.

### மொட்டையடிப்பு

மறுநாள் மானனீகையின் செயலுக்குத் தண்டனையாகத் தலையை மொட்டையடித்து விடவேண்டும் எனத் தத்தை திட்டமிட்டாள். உதயணன் இதனை அறிந்து வருந்தி எத்தனையோ வழிகளால் முயன்றும் பயன்படவில்லை. வயந்தகனும், யூகியும் முயன்றும் சில நாழிகைகளே அவள் கூந்தலைக் கத்தரிக்க விடாமல் காக்கமுடிந்தது. வாசவதத்தை வஞ்சினத்தை விட்டாளில்லை. பதுமாவதியும்கூட இரக்கம் காட்டுமாறு வேண்டி நின்றாள். பயன்படவில்லை.

### விடுவிப்பு

இந்நேரம் கோசல தேசத்தரசன் வாசவதத்தைக்கு அனுப்பி வைத்த ஓலை ஒன்றினைத் தூதுவன் ஒருவன் கொண்டுவந்து நீட்டினான். அவ்வோலையில்,

“கோசலத்தரசன் ஓலை, மங்கை வாசவதத்தை காண்க! உனது தங்கையான வாசவதத்தையையும், அவள் ஆயத்தையும் பாஞ்சால அரசன் கைப்பற்றிச் சென் றான். அவர்கள் அனைவரும் இப்பொழுது உதயண னால் கவரப் பெற்றதாக அறிகின்றேன். வாசவதத்தை இப்பொழுது தன் பெயரையும் வெளிப்படுத்தாது மானனீகை என்னும் பெயருடன் உன்னிடம் இருப்ப தாக அறிகின்றேன். அவளை யான் வருமளவும் போற்றிக் காக்க வேண்டுவது உன் கடன்” என்று எழுதப் பெற்றிருந்தது. இதனைக் கண்டபின் வாசவதத்தை பெரிதும் வருந்தினாள். தன் செயலுக்காக நொந்து கொண்டாள். மானனீகையின் கட்டுகளை அவிழ்த்து விட்டு, அவளை மணக்கோலம் செய்விக்குமாறு கட்டளையிட்டாள். அதுபோலவே உதயணனையும் மணக்கோலம் செய்யச் செய்து இருவரையும் மணமக்களாக்கி மகிழ்வுற்றாள்.

**விரிசிகை மணம்**

இது இவ்வாறாக, முன்பு ஒரு சமயம் உதயணன் சோலைவளம் காணச் சென்ற பொழுது விரிசிகை என்னும் சிறுமிக்கு மாலை தொடுத்து அழகுறச்சூட்டி மகிழ்வித்தானல்லவா! அவள் உதயணன் தொடுத்துத் தந்த மாலையை அன்றி வேறு மாலை அணியாளாய், அவனையன்றி எவரையும் மணஞ்செய்து கொள்ள மாட்டேன் என்னும் உறுதிப்பாட்டில் இருந்தாள். அதனை மாற்றி அமைக்க முடியாதென அறிந்த அவள் தந்தையான முனிவர் வேறு வழியின்றிக் கௌசாம் பிக்கு வந்து உதயணனிடம் தம் மகள் நிலைமையை உரைத்தார்.

வாசவதத்தையும் அதனை அறிந்தாள். முன்னமே, அவளுக்கு உதயணன் மாலைசூட்டியதனை அறிவாள் ஆதலால் அவளைத் திருமணம் செய்து கொள்வது பற்றி அவள் சிறிதும் கவலை கொள்ளவில்லை. எல்லோரும் மனம் ஒத்து வாழ்த்துமாறு சிறப்புடன் திருமணம் நடைபெற்றது. நான்கு மனைவியரும் உதயணனை வழிபட்டுப் போற்றிக் காத்துவர அவன் நன்முறையில் நாட்டினைக் காத்துவந்தான். கந்தருவ உலகத்தை ஆளும் மைந்தன் பிறப்பான் என்ற கனவும் உண்மையாயிற்று. தத்தை பெற்றெடுத்த மைந்தன் நரவாணதத்தன் கந்தருவ உலகத்தை வென்று இனிதுற ஆண்டான்.

**பெருங்கதைச் சுருக்கம் இது**

## கதையுள் கலை விளக்கம்

## 1. கொங்குவேளிர், பெருங்கதை

பெருங்கதை என்னும் நூலைத் தமிழில் ஆக்கித் தந்த பெருமைக்குரியவர் பெயர், கொங்குவேளிர் என்பது. இப்பெயராலே, இவர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர் என்பதும், வேளிர் என்னும் வேளாண்குடி மன்னர் வழியினர் என்பதும் விளக்கமாம்.

கொங்குவேளிர் இருந்த பெருமைக்குரிய ஊர் இந்நாளிலும் கொங்கு நாட்டில் சிறப்பொடு விளங்கு கின்றது. விசயமங்கலம் என்பது அவ்வூர்ப் பெயர். ஆங்குப் பழமையும் எழிலும் வாய்ந்த சமணர் திருக் கோயில் விளங்குகின்றது. ஈரோடு மாவட்டம் பெருந்துறைப் பகுதி சார்ந்தது.

கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதைத் தலைவன் உதயணன் ஆதலால், இது உதயணன் கதை என வழங்கப்பட்டமையும் அறியவருகின்றது.

சிலப்பதிகாரத்திற்கு அரியதோர் உரைதந்த அடியார்க்கு நல்லார், "கலியும் குருகும், வெண்டாளி யும் முதலிய செய்யுள் இலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை" என்று கூறுவதால் இதனை அறிய லாம்.

**தமிழியம்**

அன்றியும் அடியார்க்கு நல்லார் குறிப்பால், உதயணன் கதை மொழிபெயர்ப்புக் கதையே எனினும் தமிழில் அந்நாளில் சிறந்து விளங்கிய கலி, குருகு முதலாய கலைவளம் செறிந்த நூல்களைக் கொண்டு தமிழியமாகப் படைக்கப்பட்ட நூல் அது என்பதாம். ஆதலால் மொழிபெயர்ப்பாக ஒரு நூல் செய்யப்பட்டா லும் செய்யப்படும் மொழியின் பண்பாடு கலை வளம் மக்கள் வாழ்வியல் என்பவை தழுவிய மொழிபெயர்ப் பாக இருக்க வேண்டும் என்பதும் அவ்வாறு செய்யப் பட்டது பெருங்கதையாகிய உதயணன் கதை என்பதும் விளங்கும்.

இவ்விலக்கணம் கருதியே ஆசிரியர் தொல் காப்பியர், மொழிபெயர்த்து என்று மட்டும் கூறாமல், "மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்" என்றார் என்க.

**அகவல்**

உதயணன் கதை சங்க நூல்களில் கலித்தொகை, பரிபாடல் என்னும் தொகைநூல் இரண்டும் நீங்கிய பாட்டு பத்தும், தொகை ஆறும் ஆகிய 16 நூல்களும் இயற்றப்பட்ட அகவல் நடையையே மேற்கொண் டுள்ளது. அவ்வாறே சிலம்பு மேகலை என்பனவும் அகவலால் அமைந்தவையே.

ஆதலால் பெருங்காப்பியங்களாகிய சிலம்பு, மேகலை ஆகியவற்றை ஒட்டிய காலத்திலேயே இப்பெருங்கதை தோன்றியிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். அதன் நடையும் பொருள் திறம், கலைவளம் ஆகியவையும் அதற்குச் சான்றாகவே திகழ்கின்றன.

பதிப்பும் உரையும்

இக்கதையின் முற்பகுதி கிடைக்கவில்லை. எனினும் கதைப்போக்கை அறிந்து கொள்ளத் தடையின்றி அமைந்தமை சிறப்பாகக் குறிக்கத்தக்கதாம். இதனை ஏட்டில் இருந்து முதற்கண் பதிப்பித்தவர் தென்கலைச் செல்வர் உ.வே. சாமிநாதர். உரைவளம் கண்டவர் பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார்.

## 2. ஆசிரியரும் மாணவரும்

நல்ல ஆசிரியன் ஒருவனையும் அவனிடம் கற்கும் நல்ல மாணவன் ஒருவனையும் ஓர் அரிய ஓவியக் காட்சி ஆக்கி உரைக்கிறார் கொங்குவேளிர்.

உச்செயினிச் சிறையில் உதயண் உள்ளான். உச்செயினி நகரை, நளகிரி என்னும் யானை மதங் கொண்டு பேரழிவு செய்கின்றது. அடக்கும் பாகரால் ஒன்றும் கூடவில்லை. யானை செய்யும் அழிவுக்கோ எல்லை இல்லை ஊரே கடல் அலையிடைப்பட்ட துரும்புபோல அலைக்கழிகின்றது.

யாழ் மீட்டுதலில் வல்ல உதயணன் ஒருவனால் தான் இத் தீமையை அகற்ற முடியும் என்று அமைச்சர் உச்செயினி மன்னன் பிரச்சோதனனுக்கு உரைத்தனர். அவனால் சிறைவைக்கப்பட்டுத் தானே உதயணன் சிறையில் உள்ளான். உதயணன் நளகிரியின் துயரை நீக்கினால் சிறையில் இருந்து விடுவிப்பதாகத் தூது விடுத்தான். உதயணன் நளகிரியின் துயரை நீக்க ஒப்புக்கொண்டான். தன் யாழை எடுத்து இசைமீட்டிக் கொண்டே வீதியில் நடந்தான். இசையின் ஒலிகேட்டு வயப்பட்ட நளகிரி தன் அழிசெயலைவிட்டு அமைந்து நின்றது. படிப்படியே தாழ்ந்து மண்டியிட்டு நின்றது. இதனைக் கூறும் ஆசிரியர் கொங்குவேளிர்,

*"வீணை எழீஇ வீதியில் நடப்ப*
*ஆணை ஆசாற்கு அடியுறை செய்யும்*
*மாணி போல மதக்களிறு படிய"*

என்கிறார்.

யானை வீணை ஒலியால் பணிந்ததை, ஆசிரியன் கட்டளைக்குப் பணிந்து வணங்கும் மாணவன் போலப் பணிந்தது என்கிறார். மாணி எனப்படுபவன் மாணவன்.

உதயணன் ஆசிரியனாகவும், ஆசிரியன் ஆணை வீணை இசையாகவும், இசை கேட்ட யானை பணிவது, ஆசிரியன் ஆணை கேட்ட மாணவன் பணிவாகவும் உவமை கூறிய ஆசிரியர் கொங்குவேளிர் தமிழ் நன்குணர்ந்தவர் ஆதலால், பிற நாட்டுப் பிறமொழிக் கதையை மொழிபெயர்க்கும் போது தமிழியல்புக்குத் தக உவமை அமைத்துக் கொள்கிறார்.

## குறிஞ்சிப்பண்

மதுரையில் இளம்பாலர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் இருந்தார் அவர் பெயர் கூத்தன் என்பது. அவர் தந்தையார் பெயர் சேந்தன். ஆதலால் அவர் மதுரை இளம்பாலாசிரியர் சேந்தங் கூத்தனார் என வழங்கப்பட்டார். அவர் அகநானூற்றில் பாடிய பாடல் ஒன்று இக் காட்சியைக் காட்டுகிறது.

மலையடிவாரம்; ஒரு தினைக் கொல்லை. அதன் காவல் பரணில் ஓர் ஆடவன் படுத்து உறங்குகிறான். ஒரு பெண்மணி காவல் புரிகின்றாள். அவ்வேளையில் யானை ஒன்று தினைக் கொல்லையுள் புகுகின்றது அது, அழிவு செய்யவே செய்யும்! அவ்வழிவை நீக்க அதனை ஒட்டியாக வேண்டும். கணவன் உறங்குகிறான்.

அவனை எழுப்பியாக வேண்டும்! வேல், வில் எடுக்க வேண்டும்! இத் தொல்லை இல்லாமல், அப்பெண் மணி அருமையாகக் 'குறிஞ்சிப்பண்' ஒன்றைப் பாடுகிறாள். அவ்விசையைக் கேட்ட யானை தன் செவியைத் திருப்பி வயப்பட்டு நிற்கின்றது. சிறிது பொழுதில் மூடாத கண்ணை இசை மயக்கத்தால் மூடி உறக்கம் கொள்கிறது. இக் காட்சியை அப்படியே ஆசிரியர் ஆணை கேட்டுப் பணியும் மாணவர்க்குப் பயன்படுத்திக் கொள்ளும் கொங்குவேளிர் மொழி பெயர்ப்பு பண்பாட்டுச் சுவையுடன், மொழிபெயர்ப்பு நயத்திற்கும் எடுத்துக் காட்டாகிச் சிறக்கின்றது. மொழிபெயர்க்கும் ஆர்வத்தினர்க்கு வழிகாட்டி யாகவும் விளங்குகின்றது.

## 3. பெண் கொடுக்கும் பெற்றோர்

பெண்ணைப் பெற்ற பெற்றோர், தம் மகளுக்கு ஏற்ற கணவனை எப்படியெல்லாம் ஆராய்ந்து பார்த்துப் பெண்தர வேண்டும் என்பதைக் கொங்கு வேளிர், சாங்கியத்தாய் என்னும் மூதாட்டி வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

தம் பெண்ணுக்குக் கணவனாக வருபவன், இளமையும், அழகும், நற்குடிப் பிறப்புத் தொடர்ச்சியும், வாய்த்த செல்வமும், அஞ்சாத்துணிவும், அகன்று விரிந்த கல்வியும், நாட்டியல் நடைமுறை அறிவும், சீரிய ஆராய்ச்சியும் ஆகிய அரிய குணங்கள் எட்டையும் உடையவனாக இருத்தலையே விரும்புவர் என்கிறார். இதனைக் கொங்குவேளிர்;

***"இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்***
***வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்***
***தேசத்து அமைதியும் மாசில் சூழ்ச்சியோடு***
***எண்வகை நிறைந்த நன்மகற்கு அல்லது***
***மகள் கொடை நேரார் மதியோர்"*** (1:36; 89-93)

என்கிறார்.

### தொன்முறை

பேர்ப் பொருத்தம், இராசிப் பொருத்தம், வீட்டுப் பொருத்தம் என என்னென்னவோ பொருத்தம் பார்க்கிறார்களே, கொங்குவேளிர் சொல்லும் பொருத்தம்

பார்க்கிறார்களா? தமிழர் வாழ்வியல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம்,

*"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு*
*உருவு நிறுத்த காம வாயில்"*
*நிறையே அருளே உணர்வொடு திருவென*
*முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"* மெய்ப். 25.

எனப் பத்துப் பொருத்தம் கூறியதைப் பெரிதும் வழிமொழிந்தது கொங்குவேளிர் கூறிய பொருத்தங்கள் ஆகும்.

# 4. நண்பர் இயல்பு

உதயணன் உச்செயினி மன்னன் பிரச்சோதன னால் சிறைவைக்கப்பட்டான் அல்லவா! அவனை மீட்டுவதற்காக, ஒரு தந்திரம் செய்தான்.

தான் உதயணனைப் பிரிந்த கவலையால் இறந்து விட்டதாகப் பரப்பி, ஒரு பிணத்தையும் எரியூட்டிக் காட்டித் தலைமறைவானான். தனக்கு நம்பிக்கை யுடைய பலரைப் பலப்பல வேடங்களில் உச்செயினி சென்று பல்வேறு பணிகளில் அமரச் செய்து ஒவ்வொரு நாளும் ஒற்றறியைச் செய்து உண்மைநிலையை உணர்ந்தான். தானும் உதயணனும் அறிந்த பாட்டு ஒன்றைச் சிறைச் சாலைச் சுவர் அருகே நின்று பாடி, அதனை யூகி பாடுதலாக அறியச் செய்தான். நளகிரி என்னும் யானைக்கு மதமுண்டாக்கி ஊரழிவு செய்தல் வழியாக உதயணனே அதனை அடக்கமுடியும் என்பதைக் கூறி அவ்வாறே செய்தான். யானையை அடக்கிய அவன் வாசவதத்தைக்கு யாழாசிரியன் ஆகும் நிலையை ஏற்படுத்தினான். ஊருக்கு நெருப்பூட்டி அரசனே வாசவதத்தையை உதயணனிடம் ஒப்பித்துக் காக்க வகைசெய்யும் சூழலை உண்டாக்கித் தந்தான்.

உதயணன் யானையில் வாசவதத்தையோடு நாடு கடக்கவும், இடையே ஏற்பட்ட இடையூற்றை நீக்கிக் காக்கவும் வேண்டுவ எல்லாம் செய்தான்.

**அமைச்சர்**

உதயணனுக்கு யூகி, உருமண்ணுவா, வயந்தகன் இடவகன் என்னும் அமைச்சர் நால்வர் இருப்பினும்

யூகியே நட்புக் கருதி செய்தற்கு அரிய வெல்லாம் செய்தான். இவற்றை யெல்லாம் அறிந்த இடவகன் யூகியைப் பாராட்டினான்.

கெட்ட காலை விட்டனர் என்னாது நட்டோர் என்பது நாட்டினை என்று அவன் பாராட்டிய பாராட்டுதல் நட்பின் உயரிய இலக்கணமாகும்.

**கெடுகாலை**

வறுமையிலோ சிக்கலிலோ நோய்நொடி களிலோ பட்டுத் தவிக்கும் ஒருவனுக்கு நட்பாக அமைந்தவர், அவ்வேளைகளில் ஒதுங்கிவிடக் காண்கிறோம். அப்படி ஒதுங்குவாரைப் போர்க்களத் தில் உதவியாக இருக்க வேண்டிய குதிரை களத்தை விட்டே ஓடிப்போவது போன்றது என்றும், அத்தகை யோர் நட்பு, பகைவர் வாளால் வெட்டப்பட்டுச் சாவும் போது எண்ணினால் கூட, கொடுமை மிக்கதாக இருக்கும் என்றும் கூறிய வள்ளுவ விளக்கம் போல அமைந்துள்ளது யூகியை நினைத்து இடவகன் பாராட்டிய பாராட்டு.

***"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை***
***உள்ளினும் உள்ளம் சுடும்"***

என்னும் குறளொடு ஒப்புக்காட்டிப் பார்க்கத்தக்கதாம்.

**அன்பர் செயல்**

அன்பர் ஒருவர், அன்பரிடம் பெறும் பரிசு அன்பு என்னும் ஒன்றாகவே இருக்கமுடியும். என்ன கிடைக்கும் என்று உறவாடுவது உண்மை அன்பு ஆகாது. வாணிக நோக்கு உடையது அது.

**அன்பு**

அன்பின் இலக்கணம் உயர்ந்தது. அன்பு வேறு உயிர் வேறு என்பது இல்லை என்பதால் 'அன்பின்

வழியது உயிர்நிலை' என்றார் வள்ளுவர். அன்புடையார் தம் அன்பு கருதித் தம்மையே பிறர்க்கு ஒப்படைக்கும் பெருந்தன்மையர் என்பதை,

*"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"*

என்பார் வள்ளுவர்.

உதயணன் வாசவதத்தையை மணந்து கொண்டு மகிழ்ந்தான். அவ்வின்பத்தில் உற்றார், உறவு, அன்பு, நண்பு, அரசு என்பவை எதையும் எண்ணாமல் இன்பத்திலேயே பொழுதைக் கழித்தான்.

**எது வாழ்வு?**

இதுவோ வாழ்வு? இதற்கோபட்ட இப்பாடுகள்! என்பதை எண்ணிய யூகி இடவகனை நோக்கிக் கூறினான். அன்பன் கடமை அன்பு செலுத்துதல் மட்டுமன்று. அன்புடையான் தவறும் போது துணிவோடு இடித்துக் கூறித் திருத்துதல் வேண்டும். குற்றம் செய்தான் எனின் பெற்றோர் தம் பிள்ளைகளின் குற்றத்தைத் திருத்துவதற்குக் கண்டிக்கும் கண்டிப்பை காட்டித் திருத்தவும் வேண்டும். அந்நிலையிலும் உரிய அன்புக்கும் நட்புக்கும் எக்குறையும் இல்லாமல் உடலோடு ஒன்றாகி உறையும் உயிரே போலத் திகழவும் வேண்டும்.

**இடிப்புரை**

நல்லது அல்லாத பொல்லாச் செயல்களில் ஈடுபடும்போது பகையானவர் சினந்தும் சீறியும் இடித்தும் அடித்தும் படுத்தும் பாடுபோல இரக்கமின்றிச் செய்து திருத்துதலும் வேண்டும். ஆதலால் உதயணன் செயலற்று இன்பத்துய்ப்பே வாழ்வாகக் கொண்டான் எனின், இவ்வகையால் எல்லாம் நட்பான நாம் திருத்துதல் கடமையாம் என்றான். இதனைக் கொங்குவேளிர்,

*"அற்றம் காத்தலில் ஆண்மை போலவும்*
*குற்றம் காத்தலில் குரவர் போலவும்*
*ஒன்றி ஒழுகலில் உயிரே போலவும்*
*நன்றி அன்றிக் கன்றியது கடிதற்குத்*
*தகவில செய்தலில் பகைவர் போலவும்"* (2.9: 219-223)

இருத்தல் வேண்டும் என்பார்.

**பகையும் நட்பும்**

நல்லோர் பகை என்றும் கேடு செய்யாது. தம் பகைவரிடத்தும் பரிவுகாட்டாமல் இருக்க நல்லோரால் இயலாது. ஏனெனில் அவர்கள் பழகிப்போன தன்மை நல்லது செய்தலேயாம்.

ஆனால் **அல்லோர் நட்பு** தீமை செய்யாமல் தீராது. அவர்களைப் போலக் கட்டிப் பிடித்துப் பழக எளிதில் பிறர்க்கு வாராது. அவரைப் போல இனிக்க இனிக்கப் பேசவும் வாராது. அவரைப்போல மானக்கேட்டைப் பொறுத்துக் கொள்ளவும் பிறர்க்கு இயலாது. அவரைப் போல உரிய பொழுதில் காலை வாரிவிட்டுக் கண்டு கொள்ளாமல் போகவும், கண்மண் அற்றுத் தாக்கவும் பிறர்க்கு இயலவே இயலாது.

**நல்லோர் நலம்**

நல்லோர் அறம் பார்ப்பார்; தம் குடிமையை எண்ணிப் பார்ப்பார்; அல்லவர் தமக்குச் செய்த தீமையைப் பற்றிப் பிறர் கருதார்; இவருமா இது செய்தார் எனத் தம்மைப் பழிப்பார் என எண்ணிப் பார்ப்பார். எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் என்று உறுதிப்பட நிற்பார்.

அழுக்குச் சுவரிலே படும் கறை, கறையோடு கறையாய் ஒட்டிப் புதிய கறை பழைய கறை என்பவை தெரியாமை போல, அல்லோர் எதனைச் செய்யவும்

தயங்கார், எப்பழியையும் தாங்குவார்; எவர் முகத்துக்கும் மதிப்புத்தாரார். தம்மையும் விற்றுவிடத் தயங்காதவர் நல்லவற்றையெல்லாம் விட்டுவிடவா தயங்குவார்.

இத்தகு நல்லோர் அல்லோர் இயல்பை நயத்தக்க நிலையில் கூறும் இடமொன்றைத் தேர்ந்து கொள்கிறார் கொங்குவேளிர். அருமையாக நூற்பாவே போல யாத்துப் பெரும் பெரும் விளக்கம் கொள்ளவைக்கிறார். ஒவ்வொருவருக்கும் சான்றுகள் பலப்பல கிட்டும். தம் வாழ்வொடு பல்கால் இணைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய அருமையுடைய அடிகள் இரண்டு. அவை:

*"இழிந்த மாக்களோடு இன்பம் ஆர்தலின்,*
*உயர்ந்த மாக்களோடு உறுபகை இனிது"* (4.4: 21-22)

என்பவை.

**பகை நட்பு**

பகை நட்பாக் கொண்டொழுகும் பண்பாடு எங்கே? நட்பையும் பகையாக்கி இகலுக்கு எடுத்துக் காட்டாகும் இழிமை எங்கே?

வாழ்வியலொடு பொருத்திப் பார்க்க.
இலக்கியம் காட்டும் வழிகாட்டுதல்கள்
பெரும் பெரும் பட்டறிவுப் பிழிவுகளாம்
என்பதன் சான்றாவது இத்தகையது.

**பொறியியல்**

உதயணனுக்கு உதவியாக இருந்தது ஒரு தெய்வ யானை. உதயணன் ஏவியவெல்லாம் செய்தது. தன்மேல் பாகரை ஏற்றக்கூடாது என்றும், கயிறு கச்சையிட்டுக் கட்டுதல் ஆகாது என்றும், தனக்கு உணவு தருமுன் உதயணன் உணவு கொள்ளக்கூடாது என்றும்

மூன்று உறுதிகளைப் பெற்றுக் கொண்டு உதவியாக இருந்தது. இவ்விதிகளுள் ஏதொன்று தவறினும் தான் அகன்று விடுவதாகவும் கூறியிருந்தது.

### வாக்குத் தவறல்

ஒரு நாள் நெடுநேரம் நாடகம் பார்த்த உதயணன் பசி மிக்கவனாக யானையை மறந்துவிட்டு உணவு கொண்டான். இதனை அறிந்த யானை உடனே அவனை விட்டுப் பிரிந்தது. அதனைப் பின்னே உணர்ந்த உதயணன் வருந்தினான். தன் யாழை எடுத்துக் கொண்டு காடு மலை, நாடு நகர் எனத் தேடினான். இந்நிலையில் தன்னந்தனியனாகக் கவலையுடன் காடுகளில் திரியும் உதயணனைச் சிறைப்படுத்துதல் எளிது எனச் சாலங்காயன் என்னும் அமைச்சன் கூற, பிரச்சோதனன் என்னும் மன்னன் அதற்கு உடன்பட்டான்.

### செயற்கை யானை

மரம், அரக்கு, துணி, பயின் (பிசின்) முதலியவை கொண்டு இயந்திர யானை ஒன்றைப் பெரிய அளவில் தச்சர்களைக் கொண்டு உருவாக்கினான். அவ்வெந்தி யானை பெரியதும் உயிருள்ளதும் ஆகிய யானை போலவே நடையிடும் வகையிலும் துதிக்கை அசையும் வகையிலும் செய்யப்பட்டது. அதன் வயிற்றுப் பகுதியில் வீரர்கள் 96 பேர் புகுந்து கொள்ளவும், கால் பகுதி, துதிக்கைப் பகுதி ஆகியவற்றில் வில், வாள், வேல் முதலிய படைக் கருவிகள் வைத்துக் கொள்ளவும் தக்கவாறு செய்யப்பட்டது. அவ்யானை உதயணன் யானையைத் தேடித் திரியும் காட்டுக்கு நடையிட்டு வருவதாகச் சென்றது. அதன் பின்னே பல்லாயிரம் வீரர் மறைந்து கொண்டு கருவிகளோடும் வந்தனர்.

**சிறைப்படுத்தல்**

யானையைக் கண்டு மகிழ்ந்த உதயணன் தன்னைப் பிரிந்துசென்ற யானை மீளவும் வருவதாக எண்ணி நெருங்கிய போதில் யாழ் ஒன்று மட்டுமே உடையவனாக இருந்த உதயணனை, யானையுள் மறைந்திருந்த வீரர்கள் இறங்கிச் சிறைப்படுத்திக் கொண்டனர். தானே நடக்கும் பொறிகள் அமைந்த யானையைக் கொங்குவேளிர் அறிமுகப்படுத்துவது அருமைமிக்கதாம்.

இனி இன்னொரு பொறிபற்றியும் அவர் குறிப் பிடுகிறார். பொறியியல் நுட்பங்களாக அவர் குறிப்பன பலவற்றுள் இதுவும் ஒன்றாம்.

**பூணியில்லாப் பொறி**

கட்டை வண்டி, மிதிவண்டி, உந்துவண்டி, தொடர் வண்டி, வானூர்தி எதுவாயினும் இழுக்கும் உயிரி, இயக்கும் உயிரி, இயக்கும் ஆற்றல் என்பவை வேண்டும்.

சக்கர வண்டியன்றி, சக்கரமில்லா வண்டியும் பனிப்பகுதியில் உண்டு. அவற்றை அக்குளிர்ப் பகுதி யில் இழுத்துச் செல்லும் மானும் உண்டு.

கொங்குவேளிர், பொறியால் இயங்கும் வண்டி ஒன்றனைக் குறிப்பிடுகிறார். அதனை,

> ***"பூணி இன்றியும் பொறியின் இயங்கும்***
> ***மாண் வையம்"***

என்கிறார்.

பூணியாவது பூட்டி இழுப்பது. அப்படி இழுக்கும் ஒன்று இல்லாமலும் இயங்கும் பொறி வண்டியைச் சுட்டுதல் எண்ணத்தக்கது. யூகிக்கு நண்பனாக இருந்த

தச்சன் ஒருவன் செய்து தந்ததாக உள்ள செய்தி அது. 'வான ஊர்தி'யை உலகம் அண்மையிலேதான் கண்டது. ஆனால் வான ஊர்திப் பெயரை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூறு கூறுகின்றது. 'விசும்பின் வலவன் ஏவா வானஊர்தி'

என்பது அது.

**வான ஊர்தி**

வலவன் என்பான் இயக்குபவன். கப்பல் இயக்கு பவன் 'மீகான்' என்பது போல, வானூர்தி இயக்குவான் பெயர் 'வலவன்' என அறிய வைக்கின்றது.

அன்றியும், வானூர்தி கண்டு நெட்டுநெடும் காலத்தின்பின் இயக்குவான் அவ்வூர்தியில் இல்லாமல், மண்ணில் இருந்து இயக்கும் நிலை உண்டாகியுள்ளது. இத்தகையதை அப்புறப் பாடல், 'வலவன் ஏவா வான ஊர்தி' எனப் பெயரிட்டு அழைக்கிறது.

இயக்குபவன் இருந்து இயக்காமலே இயங்கும் ஊர்தி அஃது என்பதாம்.

ஆதலால் பெருங்கதை பொறியியல் செய்திகள் பலவற்றைக் கொண்டு இயங்குதல் புலப்படும்.

**கலைவளம்**

பெருங்கதையில் கலைவளம் மிகுதியும் உண்டு. யா என்பது கட்டு. கட்டுதல் வனப்பு அமைந்த இசைக் கருவி யாழ் ஆகும். கட்டுதலால் பெற்ற யாக்கை, யாப்பு என்பவற்றை ஒப்பிட்டுக் காணின் யாழின் பெயர்க் காரணம் விளங்கும். 'யா' என்ற ஓர் மரம் தொல் காப்பியத்தில் சொல்லப்படுகிறது. யாப்பு பாத்தி என்னும் பொருளில் திருக்குறளில் வருகிறது.

**யாழ் நரம்பு**

உதயணன் யாழில் வல்லான். வாசவதத்தை, **யாப்பியாயினி** என்பாரும் சுத்திறம் வல்லார். யாழ் வகைகளாகப் பெருங்கதை செங்கோட்டு யாழ், சீறியாழ், பேரியாழ் ஆகியவற்றைக் குறிக்கின்றது.

யாழுக்கு ஏற்ற நரம்பு பற்றிய அரிய செய்தியைப் பெருங்கதை கூறுகிறது. உதயணனிடம் யாப்பியாயினி என்பாள் ஒரு யாழைத் தந்து மீட்டச் சொல்ல அவன் யாழின் நரம்புபற்றிக் கூறுகிறான்.

பண்ணெழுப்ப வாராத வகையில் பிதிர்வும், இசை தொடர்ந்து மீட்டாமையிற் கிடந்த கேடும், மிக உலரச் செய்யாமையால் ஊனொடு கூடி உதவா நிலையும், நெருக்கமுறுக்கு இல்லாமல் நெடுக்க முறுக்கு ஆகியமையும், நிலத்தில் கிடந்ததுடன் முடி மயிர்தானும் இணைந்துபோய் இருந்ததும், மணலும் தும்பும் தூசியும் உள்ளுறைவாகி உரியசீர் அமையாமை யும் ஆகிய குற்றங்களைக் கொண்ட யாழ் நரம்புகளைக் கூறுதல் கொங்குவேள் கலைவல்ல திறம் காட்டும். மேலும் யாழுக்கு ஆகாத மரம் பற்றியும் விரிக்கிறார்.

**யாழ்**

சிறுபாண், பெரும்பாண் என்பவற்றில் வரும் யாழியல் ஓதிய திறத்தர்க்கே இக் கலைத்திறம் சேரும். ஆதலின் உதயணன் திறமாக வேளிர் வெளிப்படுத்தும் திறம் ஈதாம்.

**ஒப்பனைக்கலை**

**ஒப்பனைக்கலை** என்னும் ஒரு கலை, திரைப் படப் பெருக்கால் வந்ததோ என்பார் எண்ணிப் பார்க்க வல்ல காட்சியை அமைக்கிறார் கொங்குவேள்.

ஒப்பனைச் சிறப்பும் அணிகல வகைகளும் சிலம்பில் காணப்படுவது விரிவானதாகும். தன் தலை வகிடு மாறியதோ என ஒரு பெண் குரங்கு நீராகிய கண்ணாடியில் பார்த்துச் சீர்செய்து கொள்வதைப் பழந்தமிழ் அகப்பாடல் கூறுகின்றது.

கண்ணாடி பார்த்துக் கொண்டு முகத்தை மறைக் காமல் உச்சியில் கைவைத்துப் பொட்டிடும் மகளிர் சிற்பங்கள் ஆங்காங்குக் காணுதலும் திருமண வேளை யில் அவ்வாறு மணமகன் மணமகளுக்குப் பொட்டிட வைத்தலும் காணும் நாம் ஒப்பனையை மறக்க முடி யாது. கோலத்தால் பொலியாத முற்றமோ, ஒப்பனை யால் எழிலூட்டாத முகமோ மங்கல மனையில் - மங்கலப் பொழுதில் காண இயலுமா?

### பந்தடிப்பு

ஒருத்தி பந்தடிக்கிறாள். ஆடவர் புகக்கூடாத மகளிர் அந்தப்புரத்துள் ஆடவன் மகளிர் வேடமிட்டு ஆம்! ஒப்பனை செய்து கொண்டு பந்தடிப்பைப் பார்க்கிறாள். அவன் பார்வை கலைத்திறத்தால் நிலை மாறிப் பந்தடிப்பவள் மேலே பாய்கின்றது. அவன் துணையும் ஆங்கிருக்கிறாள். அவளும் அறியாப் புனைவு என்றால், புனைவுத் திறம் பெரிதுதானே!

கவர்ந்த பந்தடிப்பு வல்லானைத் தன் துணையின் ஒப்பனை மகளாகச் செய்துவிடுகிறான்.

### திருமுகம்

ஒப்பனை செய்பவன் தன் திறம் கூட்டி எழிலுறப் புனைகிறாள். கூந்தல் கோலம், முகக்கோலம் முடிந்த தும் அவற்றைத் தன் மணவாளன் கண்டு மகிழ மங்கை அவள்முன் வருகிறாள். அவள் ஒப்பனை அழகைப் பாராட்டிய அவன் அதனினும் எழில்மிக்கது எனத்

தான் செய்கிறான். தன் மனைவியின் திருமுகத்தையே திருமுகம் (கடிதம்) ஆக்கித் தன்விருப்பை அவள் அறிந்த யவன மொழியில் கோலமாகத் தீட்டிவிடுக்கிறாள்.

அதனைக் கண்ட ஒப்பனைப் பணியாள் திகைத்துப் போகிறாள்; திகைப்பை மறைத்து இது குறை சில உடையது எனப் பணிந்து கூறித் திருத்துவாள் போல மறுப்புச் செய்தியை முகக் கோலத்தில் வரைந்து தலைவனிடம் காட்டிவரச் சொல்கிறாள்.

அஞ்சல்காரர் போல அவள் நடந்து இருவர் முக அஞ்சல்களையும் படிக்க வைக்கிறாள். தலைவன் நீ இல்லையேல் நானில்லை என்பது போல எழுத, உருகிய பணிப்பெண் சந்திக்க ஓரிடம் திட்டப்படுத்தி எழுதுகிறாள்.

'ஏதோ இருக்கிறது' என்பதை அறியமாட்டாளா தலைவி!

இருவரையும் தக்க வகையால் ஏமாற்றித் தன் தலைமையை நாட்டுகிறாள்!

திருமுகத்திலேயே திருமுகம் தீட்டிவிடுக்கும் இக்காதைக்கு **முகவெழுத்துக் காதை** என்று பெயர் சூட்டுதல் ஒப்பனைக்கு ஒப்பனை அல்லவா!

**முடி திருத்தகம்**

'முடி திருத்தகம்' என இந்நாள் வழங்கப்படுதல் என அறிவோம். 'மயிர் மழிமனை' எனப் பெயர் சூட்டு கிறார் கொங்குவேள் அதற்கு, முடிவெட்டும் 'கத்தரிகை' பற்றிய அவர் உரை வியப்பும் நயப்பும் தருவதாம். இவ்வாறு கலைவல்ல தோன்றலாகத் தோன்றுகிறார் கொங்குவேள். பல இடங்களில் இளங்கோவடிகள் கலைவளம் கொங்குவேளிடம் பளிச்சிடக் கண்டு மகிழ வாய்க்கின்றது.

❖❖❖❖